REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுன் 5 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 131 | Monday 05, June, 2023 | 12 பக்கங்கள் | 50/-

## ஒடிசா ரயில் விபத்து; ஜனாதிபதி ரணில் இரங்கல்

### பிரதமர் மோடிக்கு விசேட செய்தி அனுப்பினார்



இந்தியா ஒடிசா மாநிலத்தில் ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானமை தொடர்பில் மிகுந்த கவலை அடைவதாக

04

## மத நல்லிணக்கத்துக்கு கெடுதல் செய்வோர் மீது கடும் நடவடிக்கை

### முப்படையினர், பொலிஸாருக்கு ஜனாதிபதி ரணில் உத்தரவு



மத நல்லிணக்கத்துக்கு கெடுதல் செய்பவர்கள் நாட்டுக்கு புற்றுநோயாகவே இருப்பார்கள். எனவே, பொலிஸார் மாத்திர மல்ல, முப்படையினரும் இணைந்து நாட்டில் மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயற்படும் குழுக்களையும், அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதையும் விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கு மாறு பாதுகாப்பு

04

## கஜேந்திரகுமார் MPயின் குற்றச்சாட்டு;

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரால் அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

### நீதிமன்றில் இன்று உண்மை நிலை அறிவிக்கப்படும்



யாழ்ப்பாணத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் MP மற்றும் பொலிஸாருக்கு இடையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் அறிவுறுத்தியுள்ளார். சம்பவம் தொடர்பில் இன்று (திங்கட்கிழமை)

04

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 50வீத இருப்பை பேணுவது இனி கட்டாயம்

### சகல நிலையங்களுக்கும் அமைச்சர் கஞ்சன கண்டிப்பான உத்தரவு



இலங்கையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறைந்தது 50 வீத எரிபொருள் இருப்பை பேணுவது கட்டாயம் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த இரண்டு தினங்களாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு 50 வீத இருப்பை பேணாத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாதாந்த சூத்திரத்திற்கு அமைவாக நேற்று முதல்

# 12.5 Kg லிற்றோ GAS 452 ரூபாவால் குறைப்பு




### 5 Kg சிலிண்டர் 181 ரூபாவாலும் 2.3 Kg சிலிண்டர் 83 ரூபாவாலும் குறைந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாதாந்த விலைச் சூத்திரத்துக்கு அமைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை நேற்று ஞாயிற்றுக்கிழமை (4) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது என லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாவினாலும், 5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 181 ரூபாவினாலும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 83 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

04

## ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட வேலைத்திட்டம்

# முல்லைத்தீவில் 29,000 ஏக்கர் காணி விடுவிப்பு




### வனவளத் திணைக்களம் இணக்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்கள் தற்போது பயன்படுத்தும் 29 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களம் இணங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட பதில் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடல் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, "கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா முதலிய மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் முன்னர் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்த 29 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவித்தல் தொடர்பில் மீள் வர்த்தமானி உருவாக்கத்துக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று முன்னர் மக்கள் பயன்பாட்டில் இருந்த 17 ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்றுவரை விடுவிக்கப்படாமல் பற்றைகளும், காடுகளுமாக காணப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வைப் பெற்றும் கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் தேசிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வனஉயிரிகள் திணைக்களத்தின்

04

## அதிக உஷ்ண நிலைமையால் சிறார்களுக்கு தோல் வியாதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் தற்போது நிலவும் அதிக உஷ்ணமான கால நிலை காரணமாக சிறுவர்கள் மத்தியில் தோல் சம்பந்தமான நோய்கள் அதிகரித்து வருவதாக சிறுவர் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா, சிறுவர்கள் மத்தியில் காணப்படும் இத்தகைய தோல் சம்பந்தமான நோய்கள் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதிக உஷ்ணம் காரணமாக இத்தகைய நோய்கள்

04

## லாப் Gas விலைகளும் இன்று முதல் குறையும்

### அந்த நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

லிற்றோ கேஸ் நிறுவனம் சமையல் எரிவாயுவின் விலைகளை குறைத்துள்ள நிலையில் லாப் கேஸ் நிறுவனமும் இன்று முதல் சமையல் எரிவாயுவின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எந்தளவு விலைக் குறைப்பு மேற்கொள்ளப்படும் என்பது

04

### 64 ஹஜ் யாத்திரிகர்களை உள்ளடக்கிய

## முதலாவது ஹஜ் குழு நேற்று புனித மக்கா நோக்கி பயணம்



**மர்லின் மரிக்கார்**

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும்பொருட்டு இலங்கையிலிருந்து செல்லும் ஹஜ் யாத்திரிகர்களின் முதலாவது குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக

04



## சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

05 மாதங்களில் 5,24,486 பேர் வருகை

03

## ஒடிசாவில் இடம்பெற்ற கோர ரயில் விபத்து;

# மீட்பு பணிகள் நிறைவுற்று சீரமைப்பு பணிகள் ஆரம்பம்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



ஒடிசா மாநிலம் பாலாசோர் மாவட்டத்தில் கோரமண்டல் விரைவு ரயில் உட்பட மூன்று ரயில்கள் மோதி விபத்துக்குள்ளான இடத்துக்கு நேரில் வந்த பிரதமர் நரேந்திர மோடி மீட்புப் பணிகளை ஆய்வு செய்தார்.

அப்போது மத்திய அமைச்சர்கள் அஷ்வினி வைஷ்ணவ், தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோர் இருந்தனர். தேசத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ள ஒடிசா ரயில் விபத்தில் மீட்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும், சீரமைப்பு பணிகள் தொடங்கி உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒடிசா மாநிலம் பாலசோர் பகுதியில், ஷாலிமர் சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ், யஷ்வந்த்பூர் ஹவுரா கடுகதி ரயில் மற்றும் சரக்கு ரயில் ஆகியவை மோதி பெரும் விபத்து நிகழ்ந்தது. இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நிகழ்ந்தது. இதில் சிக்கி இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 280 ஆக அதிகரித்துள்ளது. 900 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.



04

## விடைத்தாள் மதிப்பீட்டு பணி; நிலுவையில் உள்ளது



பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு, 2 பில்லியனுக்கும் அதிகமான நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளதாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத்

04

## யாழ். பல்கலையில் மோதல்;

# 31 மாணவர்களுக்கு உள்நுழையத் தடை



யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 31 மாணவர்களுக்கு நேற்று (4) முதல் உள்நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும் மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயற்பாடுகளில்

04

## ஏரியில் மூழ்கி இரு இளைஞர்கள் பலி

### தெஹியத்தகண்டியில் பரிதாப சம்பவம்



தெஹியத்தகண்டி ஹெனானிகல தெற்கு ஏரியில் நேற்று (4) காலை நீராடச் சென்ற ஹபராதுவ பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவர் உட்பட இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெஹியத்தகண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

04



தன் மீது பொலிஸ் தாக்குதல் முயற்சி;

**மனித உரிமை ஆணைக்குழுவில் கஜேந்திரகுமார் MP முறையீடு**

03



**கஜேந்திரகுமாரை எவரும் தாக்கியதாக பதிவில்லை**

வாய்த்தர்க்கமே இடம்பெற்றது

03



**பாணந்துறையில் கரையொதுங்கிய உலகின் மிகப்பெரிய ஆமை**

04



35 கோடி பெறுமதியான

**மாணிக்கக் கல்லை திருடியவர் கைது**

04

# பொசன் தின நிகழ்வுகள்



ஹோமாகம பிட்டிப்பான சந்தியில் அவுக்கன புத்தர் சிலையை திறந்து வைத்தபின்னர், மகாசங்கத்தினருடன் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன இருப்பதை படத்தில் காணலாம். யுத்த வீரர்களின் நினைவாக இந்தச் சிலை நிறுவப்பட்டுள்ளது. *(படம்: நிஸங்க விஜயரத்ன)*

















## தொழிற்சாலை பணியாளர் இயந்திரத்தில் மோதி பலி

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

களுத்துறை வடக்குப் பொலிஸ் பிரிவிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றின் பணியாற்றும் பணியாளரின் தலை தன்னியக்க அச்சு இயந்திரத்தில் மோதுண்டதில் அவர் காயமடைந்து மரணமடைந்துள்ளார்.வஸ்கடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி நிறுவனத்தில் அச்சு இயந்திரமொன்றில் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட பணியாளர் ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்று (4) அதிகாலை ஏற்பட்டுள்ளதுடன் காயமடைந்தவரை களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் களுத்துறை வடக்குப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தேசிய பாடசாலைகளுக்குப் பதிலாக 1250 இணைந்த பாடசாலைகள்

### நாடளாவிய ரீதியில் உருவாக்க திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய பாடசாலைகளை தொடர்ந்து உருவாக்காமல் அதற்குப் பதிலாக இணைந்த பாடசாலைகளை உருவாக்குவதற்கு கல்விமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1250 இணைந்த பாடசாலைகளை நாடளாவிய ரீதியில் உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் அருகிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் பாடசாலை குழுமமாக இணைந்து செயற்படுவதுடன் அதில் பிரபலமான பாடசாலை ஒன்றுடன் ஏனைய பாடசாலைகள் இணைந்து செயற்படவுள்ளன.




அந்த வகையில் ஆரம்ப பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பிரதான பாடசாலையில் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் அவ்வாறில்லாத மாணவர்கள் 13ஆம் வகுப்பு வரை தொடர்ச்சியாக கல்வி பயிலும் வகையில் பாடசாலைகளை முன்னேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஜனாதிபதி அலுவலக ஏற்பாட்டில் ஐஸ் கிரீம் தன்சல்



புனித மஹிந்த தேரரின் இலங்கை வருகையை நினைவு கூறும் முகமாக ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐஸ்கிரீம் தன்சல் நேற்று முன்தினம் (03) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மக்களுக்கு ஐஸ்கிரீம் வழங்கி தன்சல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரியவும் கலந்துகொண்டார்.




தமிழ்நாடு திருவள்ளுவர் கழகத்தின் அறக்கட்டளை பிரிவின் சென்னையில் அமைந்துள்ள தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற சிறப்பு பட்டிமன்றம், கவியரங்கம், ஆகிய நிகழ்வுகளில் விருது பெற்ற தமிழ்ப்பிறை புலவர் தீவான் முகம்மது நகீப் அவர்களை பாராட்டி புரவலர் ஹாசிம் உமர் விருது வழங்கிவைப்பதையும் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் மற்றும் அமைப்பின் முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம்.

## அடுத்த வருட ஆரம்ப பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படலாம்

### ஆளும் கட்சியின் அமைச்சர்கள், கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கு முன்னோடியாகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போதைய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் ,அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்கள் ஆகியோரை அண்மையில் அழைத்து நாட்டின் எதிர்கால வேலைத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளதாக பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



மிக மோசமான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது குறிப்பிடத்தக்க அளவில் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் அதில் மேலும் முன்னேற்றங்களை காண முடியும் என்றும் அதன் போது குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, எதிர்காலம் தொடர்பான அரசாங்கத்தின் முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துமாறும் அமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்களிடமும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எந்த ஒரு தேர்தலுக்கும் முகம் கொடுக்கும் வகையில் கிராமங்களுக்குச் சென்று அதற்கான பின்னணியை உருவாக்குமாறு ஜனாதிபதி அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர் ஸாகிருக்கு கலைஞரின் "முரசு பூமாலை" விருது



அறம் அன்பின் அடையாளம் அறக்கட்டளை சார்பில், ஜூன் 03, மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட "கலைஞரின் பூமாலை விருதுகள் 2023" விருது வழங்கலில் ஊடக தர்மத்தைப் பேணி, ஊடகத்தில் சிறந்து பணியாற்றிவரும் ஊடகவியலாளர் எம். எஸ். எஸ். ஸாகிர் சிறந்த ஊடகவியலாளருக்கான விருதான "முரசு பூமாலை" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆயிரக்கணக்கானோர் இவ்விருதுக்கு விண்ணப்பித்திருந்தாலும் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொருவர் இவராவார்.

பல்துறை சாதனையாளர்களுக்கு இவ்விருதுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஊடகத்தில் தனக்கென தனி முத்திரை பதித்து வரும் ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம். ஸாகிர், இதுபோன்று இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என்று ஊடக சமூகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## பாரம்பரியம் நிகழ்ச்சியில்'மௌலவி ரைசுதீன் நினைவுகளோடு மௌலவி அலி'

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் நாளை (06) இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் அதிதியாக கலந்து கொள்ளும் கண்டி கெலிஓயா தெல்லங்க மௌலவி அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.அலி இம்தாதி அவர்கள், 'அஸ்மாவுல் ஹுஸ்னா' புகழ் மர்ஹூம் மௌலவி அல்ஹாஜ் காரி எச்.எம்.எல்.எம்.ரைசுதீன் அவர்களின் முஸ்லிம் சேவையுடனான பங்களிப்புகளை பகிர்வதோடு, அவரது நினைவுகளையும் நினைவு கூருகிறார். அதேவேளை முஸ்லிம் சேவைக்கு வழங்கிய தனது பங்களிப்புகளையும் பகிர்ந்து கொள்கிறார்.

1966 ஆம் ஆண்டு அறிமுகமான "தர்ஜுமத்துல் குர்ஆன்" நிகழ்ச்சியினை முதன் முதலாக நடாத்தி அந்நிகழ்ச்சியினை ஜனரஞ்சகப்படுத்திய பெருமை மர்ஹூம் மௌலவி அல்ஹாஜ் ரைசுதீன் அவர்களையே சாரும். சர்வதேச திருகுர்ஆன் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற இவர், அந்நாட்களில் புகழ்பெற்ற காரியாக திகழ்ந்தார்.



அதிதியாக பங்கேற்கும் மௌலவி அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.அலி அவர்கள், அதிகமான பிரார்த்தனை நிகழ்ச்சிகள் வழங்கி நேயர்கள் மத்தியில் ஒரு அடையாளத்தை தனதாக்கிக் கொண்டவர். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் இவரது குரலில் பதிவு செய்யப்பட்ட தமிழ் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குர்ஆனின் துஆக்கள் அவ்வப்போது ஒலிபரப்பாகி, அதிகளவிளான நேயர்களின் நெஞ்சங்களை ஈர்த்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.நிகழ்ச்சியினை எம். எஸ். எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

## ஜனரஞ்சகப் பாடகர் கலைக்கமலின் "கீத் ராத்" பாட்டும் பாராட்டும்

ஜனரஞ்சகப் பாடகர் கலைக்கமலின் "கீத் ராத்" பாட்டும் பாராட்டும் (02) நிகழ்வு எதிர்வரும் 2023.06.18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு, கொழும்பு 07, ஜே. ஆர். ஜயவர்தன மண்டபத்தில் நடைபெறும்.




பிரபல பின்னணிப் பாடகர்களான மொஹமட் ரபி, நாகூர் ஈ. எம். ஹனிபா, டீ. எம். சௌந்தராஜன், கே. ஜே. ஜேசுதாஸ், எஸ். பி. பாலசுப்பிரமணியம் ஆகிய ஐந்து பாடகர்கள் பாடிய பாடல்களை மையமாக வைத்து Five in One ஆக இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

கொழும்பு 10, அல்ஹிதாயா கல்லூரியில் குளிரூட்டப்பட்ட எம். சீ. பஹார்தீன் மண்டபத்தை அமைத்துக் கொடுத்து சமூக தீபம் டொக்டர் அல்ஹாஜ் எம். சீ. பஹார்தீனின் அர்ப்பணிப்பாக இந்த இசை நிகழ்வும் பாராட்டு விழாவும் நடத்தப்படவுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூன் 5 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## 05 மாதங்களில் 5,24,486 பேர் வருகை



இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் 5 இலட்சத்து 24 ஆயிரத்து 486 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். இந்த ஆண்டு மே மாதத்தில் மாத்திரம் 83 ஆயிரத்து 309 வெளிநாட்டவர்கள் சுற்றுலா வந்துள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம் 30 ஆயிரத்து 207 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக

04

# தாதியர் சேவைக்காக 3316 பேரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தாதியர் சேவைக்காக பயிற்சியில் ஈடுபட்டு வரும் 3316 மாணவ தாதியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தாதியர் பயிற்சி பாடசாலைகளுக்குமான

வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2018 2019 கல்வியாண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதனை யடுத்து நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கி



ணங்க நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த பயிற்சி தாதியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மேற்படி தாதி பயிற்சியாளர்களுக்கு நாட்டிலுள்ள 16 தாதியர் பயிற்சி பாடசாலைகளில்

04

# அடுத்த சில நாட்களில் பருவப்பெயர்ச்சி தாக்கம்

## நாடு முழுவதும் இடி, மழைக்கு சாத்தியம்



நாடு முழுவதும் அடுத்த சில நாட்களில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக ஆரம்பிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் வடமேல் மாகாணத்தில் அதிகளவு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில்

04

புலம்பெயர் அமைப்புக்களிடம் சிக்கிவிட வேண்டாம்;

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பம்

## நழுவவிட வேண்டாமென தமிழ் தரப்புகளிடம் அலிசப்ரி பகிரங்க கோரிக்கை



பிரிவினை கோரி தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமையால் ஏற்பட்ட இழப்புக்களை நன்றாகவே உணர்ந்துள்ள தமிழ்த் தலைவர்கள், புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களின் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி மீண்டும் ஆயுதப்போருக்கு வழிசமைத்து விடக்கூடாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா ஒருபோதும் பிரிவினைக்கு அங்கீகாரம் வழங்காது என்ற யதார்த்தத்தை புரிந்து கொண்டு முற்போக்கான சிந்தனைகளை கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட அனைத்து விடயங்களுக்கும் பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வினை காண்பதற்கு தற்போது அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 'வடுவாகெட்டுகல' பிரதேசத்தில் கருங்கல் உடைப்பதை நிறுத்தவும்

## வடமேல் மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை



தம்பதெனிய பிரதேசத்தில் அமைந்துள்ள 'வடுவா கெட்டு கல' அடிவாரத்தை அண்டிய பகுதிகளில் கருங்கல் உடைப்பதை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆளுநரின் செயலாளர் இந்திக்க இலங்ககோனுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அது தொடர்பாக ஆய்வுகளை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்கும் வரை கருங்கல் உடைப்பதை நிறுத்த பணிப்புரை வழங்கியுள்ளார்.

தம்பதெனிய ஸ்ரீ விஜயசுந்தரராம ரஜமஹா விகாரைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே ஆளுநரால் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இராஜதானியான தம்பதெனிய, புத்தரின் புனித தந்தம் வைக்கப்பட்டிருந்த புண்ணிய பூமியாகும். வடுவா கெட்டு கலயின் அடிவாரப் பகுதி கருங்கல் உடைக்கும் போர்வையில் பெருமளவு அழிக்கப்பட்டு வருவதாக தேரரும், அரசியல்வாதிகள் மற்றும் கிராம மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

இது தொடர்பாக கவனம் செலுத்தி அங்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஆளுநர், தொல்பொருளியல் திணைக்களம், சுரங்கங்கள் பணியகம் உள்ளிட்ட அதற்குரிய அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி தேவையான தீர்வினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தன் மீது பொலிஸ் தாக்குதல் முயற்சி;

# மனித உரிமை ஆணைக்குழுவில் கஜேந்திரகுமார் MP முறையீடு



தம்மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சித்த பொலிஸ் அதிகாரி தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளதாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் (02) மக்கள் சந்திப்பில் பங்கேற்றபோதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இது குறித்து அறிவித்துள்ளார்.

# கஜேந்திரகுமாரை எவரும் தாக்கியதாக பதிவில்லை

## வாய்த்தர்க்கமே இடம்பெற்றது – பொலிஸ்



யாழ். வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொலிஸாருக்கு இடையில் வாய்த்தர்க்கம் மாத்திரமே இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் (04) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு எந்தவொரு அச்சுறுத்தலோ அல்லது தாக்குதலோ இடம்பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

04


# பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 04/10/17/24 ஜூலை 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 04/10/17/24 ஜூலை 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 04/10/17/24 ஜூலை 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 05/11/18/25 ஜூலை 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 06/12/19/26 ஜூலை 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 07/13/20/27 ஜூலை 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 08/14/21/28 ஜூலை 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 யூன் 07ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 140,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123I085 | LKA18223L086 | LKA36424F072 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 65,000 | 30,000 | 45,000 | 140,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 யூன் 07
தீர்ப்பனவுத் திகதி : 2023 யூன் 09
வழங்கப்படும் திகதி : 2023 யூன் 09
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 யூன் 07, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய உப்பு நிறுவனம்

**NSL/HO/PUR/Planks/ 2023/01**

கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஆனையிறவு உப்பளத்திற்கு கினிசப்பு அரிந்த மரப்பலகைகளை (Planks) வழங்குவதற்கான விலைமனுக்களை தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய உப்பு நிறுவனம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

1. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
2. ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ 1500.00 செலுத்துவதன் பேரில்

   2023.06.05 முதல் 2023.06.20 வரை, 9.00 மணி முதல் 15.00 மணி வரை கொழும்பு 05, எல்விட்டிகல மாவத்த, இல. 561/3, ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சு, தேசிய உப்பு நிறுவனம், பொது முகாமையாளருக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம் கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.

| இல | விபரம் | தொகுதி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கினிசப்பு அரிந்த மரப்பலகைகள் அகலம் - 12"x தடிப்பு -1" (ஒவ்வொரு அரிந்த மரப்பலகையும் 08' இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.) | Leanier Foot | 30,000 |

3. விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டவாறு விலைமனு விலையின் விலைமனுப் பிணை 1% ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்படல் வேண்டும்.
4. வழங்குநரின் போக்குவரத்து செலவில் ஆனையிறவு உப்பளத்திற்கு பொருட்கள் வழங்கப்படல் வேண்டும்.
5. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2023.06.20ம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கீழேயுள்ள முகவரிக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரரின் சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.
   கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கினிசப்பு அரிந்த மரப்பலகைகளுக்கான விலைமனுக்கள் என்று தயவு செய்து குறிப்பிடுங்கள்.

மேலே சொல்லப்பட்ட முகவரியானது

**தலைவர்,**
**தி.பெ.கு- சிறிய குழு**
**தேசிய உப்பு நிறுவனம்**
**ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு - 05.**








## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

35 கோடி பெறுமதியான

# மாணிக்கக் கல்லை திருடியவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மீகொட பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கொள்ளையிடப்பட்ட 35 கோடி பெறுமதியான மாணிக்கக்கல் மற்றும் 27 இலட்சம் பெறுமதியான கைக்கடிகாரத்துடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக மீகொட பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மீகொட பகுதியில் வைத்து 'சாட்டர் சூட்டி'என்று அந்த நபரை ஹெரோயின் போதைப்பொருள் பார்சல் ஒன்றுடன் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெசாக் போயா தினத்தன்று மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளதுடன் சந்தேக நபரிடமுள்ள மாணிக்கக் கல்லை விற்றுக் கொடுப்பதற்கு பொறுப்பேற்ற நபர் மற்றும் அந்த மாணிக்கக்கல்லை வகைப்படுத்துவதற்கு பொறுப்பேற்றுக் கொண்டவர் ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பாணந்துறையில் கரையொதுங்கிய உலகின் மிகப்பெரிய ஆமை



உலகின் மிகப்பெரிய ஆமை இனத்தைச் சேர்ந்த கடல் ஆமை ஒன்று பாணந்துறை கடற்கரையில் நேற்று முன்தனம் (03) பிற்பகல் கரை ஒதுங்கியுள்ளது. நாட்டுக் கடற்பரப்பில் இவ்வாறான விலங்குகளை காண்பது மிகவும் அரிதாகவே காணப்படுவதாக பாணந்துறை கரையோர பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாணந்துறை கடற்கரையில் கரையொதுங்கிய இந்த ஆமை சுமார் 06 அடி 07 அங்குல நீளம் கொண்டது. இது குறித்து கருத்து தெரிவித்த ஆமை பாதுகாப்பு திட்டத்தின் தலைவர் கடல் ஆமை நிபுணர் துஷான் கபுருசிங்க, "உலகின் மிகப்பெரிய ஆமை இனம் அழிவின் விளிம்புகளை கொண்டுள்ளது. வட இந்திய பெருங்கடல் நாடுகளில் இருந்து இலங்கை மற்றும் இந்திய அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் மட்டுமே இவை முட்டையிட வருகின்றன என தெரிவித்தார்.

# தொழு நோய் தொடர்பான நூல் வெளியீட்டு விழா

கவிஞர் பெனி எஸ். ஜே எழுதியுள்ள *Pain sans PAIN* (வலியில்லாத வலி) என்ற ஆங்கில நாவலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 07ஆம் திகதி கண்டி சத்தியோதய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் வடபுலத்தில் வாழும் தொழு நோயாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை சித்தரிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்நாவல் கிளிநொச்சி காவேரி கலா மன்றத்தின் பணிப்பாளரும், நூலின் பதிப்பாளருமான வண ரி.எஸ். யோசுவா தலைமையில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக, இலங்கை மாநில இயேசு சபைத் தலைவர் அருட்பணி, ஆஞ்சலோ சுஜீவாவும், கௌரவ விருந்தினர்களாக நேபாள நாட்டைச் சேர்ந்த தொழுநோய் பணியக தேசிய பணிப்பாளர் திரு. ஷொவாக்கர் கண்டலும் நரம்பியல் மருத்துவர் ஸ்வாஸ் பாரலும், இந்தியாவின் பிரைட்டர் ஃபியூச்சர் நிறுவனத்தின் பணிப்பாளர் பரீஸ்போகுலாவிக்டரும் கலந்துக் கொள்ள உள்ளனர்.

இலங்கையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் மன்றத்தின் தலைவர் கே. ஜி அமரசிங்க இந்நூலின் முதற்பிரதியை வெளியிட பிரதம அதிதி அதனைப் பெற்றுக்கொள்வார்.

நூலாசிரியரின் முதலாவது நாவல் இவ்வருடம் ஜனவரி மாதம் 'பால்மரக் காடு' என்ற பெயரில் எஹலியாகொடவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தற்போது வெளியிடப்படுவது இரண்டாவது நாவல் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை சித்தரிக்கும் வகையில் இலங்கையிலிருந்து வெளிவரும் முதல் ஆங்கில நாவல் இதுவாகுமென ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# புளத்சிங்கள இந்து மாமன்ற அறநெறி பாடசாலையின் அறநெறி விழா

புளத்சிங்கள இந்து மாமன்ற அறநெறி பாடசாலையின் அறநெறி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 2024.06.11 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது.

வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சன் சிவஞானசுந்தரத்தின் தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது. வன்னி ஹோப் நிறுவனத்தின் பூரண அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வில், புளத்சிங்கள இந்து மாமன்ற அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படும். அன்றைய தினம் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். இங்கு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், சமய சொற்பொழிவுகள் , சேவை பாராட்டு கௌரவிப்பும் இடம்பெற உள்ளது.

# களுத்துறையில் பொசன் வலயம்



களுத்துறை நகரில் பிரமாண்டமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பொசன் வலயம் முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபே குணவர்த்தன தலைமையில் (03) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன்போது களுத்துறை மாவட்ட செயலாளர் பிரசன்ன ஜே. குமார உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டுள்ளதையும் காட்சிப்படுத்த பொசன் கூடொன்றினையும் படங்களில் காணலாம். **(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



அநுராதபுரம் மார்கட் பகுதியில் அமைந்துள்ள சதொச வியாபார நிலையத்தை அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த (02) பார்வையிட்டபோது பிடிக்கப்பட்ட படம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## சுற்றுலா பயணிகளின்... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்படுகிறது. எனவே, இந்த ஆண்டில், குறித்த காலப்பகுதியில், சுற்றுலாவில் ஈடுபட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை, 175.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

## தாதியர் சேவைக்காக... (03 ஆம் பக்கத் தொடர்)

பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தாதி மாணவர்களை இணைத்துக் கொள்வதில் ஓரளவு காலம் எடுப்பதால் அதனை தாமதப்படுத்தாமல் விரைவு படுத்துமாறும் சுகாதார அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

## அடுத்த சில நாட்களில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது. நாடு முழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4045 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளதேவையானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கஜேந்திரகுமாரை ... (03 ஆம் பக்கத் தொடர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (02) மாலை மருதங்கேணியில் தாக்கப்பட்டுள்ளார். அவரை அடித்ததாகக் கூறப்படுவர் தப்பிச் சென்று தலைமறைவாகினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## 31 மாணவர்களுக்கு ...

ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் 'மாகோஸ்' வார நிகழ்வுகள் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கடந்த வெள்ளிக்கிழமை (2) மற்றும் சனிக்கிழமை (3) இரண்டாம் வருட மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி, மோதலில் முடிந்தது.

இந்த சம்பவத்தின்போது மூன்றாம் வருட மாணவர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பிலான முதற்கட்ட விசாரணைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (4) இடம்பெற்றது. இவ்விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் முறையான விசாரணைகள் முடிவுறும் வரை உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைய, நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரை உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். இதேநேரம், மோதல் சம்பவத்தையடுத்து முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் 'மாகோஸ்' வார நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மத நல்லிணக்கத்துக்கு...

படைகளின் பிரதானிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான சம்பவங்கள் தற்செயலானவை அல்ல எனவும், மாறாக திட்டமிட்ட வகையிலேயே முன்னெடுக்கப்படுவதாகவும் தேசிய புலனாய்வு பிரிவு ஜனாதிபதிக்கு தகவல் வழங்கியிருந்தது.

மேலும், வரலாற்றில் எந்தவொரு காலகட்டத்திலும் நாடு எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடியினால் மக்களும் நாடும் பாதிக்கப்பட்டு தற்போது முன்னோக்கி நகர்கின்ற இன்றைய சூழ்நிலையில், மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி, நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு கொண்டுசெல்லும் வகையில் சில குழுக்கள் திட்டமிட்டு செயற்படுவதாகவும் அந்த புலனாய்வு தகவல்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாதுகாப்பு படைகளின் பிரதானிகளை சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத நல்லிணக்கத்துக்கு கெடுதல் செய்யும் நபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான குழுக்களுக்கு இடமளிக்காது பொலிஸார் மற்றும் முப்படையினரும் செயல்பட வேண்டும். நாட்டின் அனைத்து பாதுகாப்புப் பிரிவுகளும் ஒன்றிணைந்து மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறுபுறம், மத மற்றும் இன நல்லிணக்கத்தை பாதுகாப்பதற்கான தேசிய நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயல்படும் நபர்கள் குறித்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கவும். 2015ஆம் ஆண்டில் விசேட பொலிஸ் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், இன்று அந்த பிரிவு இல்லை. எனவே, அதனை மீள ஆரம்பிக்க ஏற்கனவே பணிப்பரை விடுத்துள்ளேன்.

பொலிஸார் மாத்திரமல்ல, முப்படையினரையும் இணைத்து வலுவான ஒரு பிரிவை உருவாக்க வேண்டும். நாட்டில் மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயல்படும் குழுக்களின் பின்னால் யார் உள்ளனர் என்பதை விரைவில் கண்டறிய நடவடிக்கை எடுங்கள். அப்போது தான் இந்த பிரச்சினைக்கு நிலையான தீர்வு கிடைக்கும் என ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

## முதலாவது ஹஜ் குழு....

சவூதி அரேபியாவின் மக்கமா நகருக்கு பயணமானது.

64 பேரை உள்ளடக்கிய இலங்கையின் இவ்வருடத்திற்கான முதலாவது ஹஜ் குழுவை வழியனுப்பி வைக்கும் நிகழ்வு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இவ்வைபவத்தில் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபதிரன, வீசா பகுதிக்கான பொறுப்பதிகாரி சாலிஹ் அப்துல் லாஹ் அல்ஃபராஜி, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன், இலங்கை ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்ராஹிம் அன்சார், இலங்கை விமானப் போக்குவரத்து அதிகார சபையின் உப பணிப்பாளர் கலாநிதி அஜித் மென்டிஸ், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் அலா அஹமட், ஹஜ் குழு உறுப்பினர்களான இபாஸ் நப்கான், ஹனீபா இஸ்ஹாக், இலங்கை ஹஜ் பயண முகவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரக அதிகாரிகள், விமான நிலைய உயர் அதிகாரிகள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி, உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும், ஹஜ் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக வருகைதரும் அல்லாஹ்வின் விருந்தினர்களை சவூதி அரசாங்கம் பெரிதும் வரவேற்பதாகவும் இரு புனிதஸ்தலங்களினதும் பாதுகாவலரின் அரசாங்கம் அல்லாஹ்வின் வீட்டிற்கு வருகைதரும் யாத்திரிகர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அவர்களின் வசதியை உத்தரவாதப்படுத்துவதற்கும், தமது ஹஜ் கிரியைகளை மிகவும் எளிதாக நிறைவேற்றுவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## மீட்பு பணிகள்...

ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி அவசர ஆலோசனை நடத்தினார். மீட்பு பணிகள், நிவாரணம், ரயில் விபத்து, சிக்னலை தாண்டி ரயில் எப்படி சென்றது உள்ளிட்ட பல முக்கிய விஷயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

புதுதில்லியில் இருந்து புவனேஸ்வரத்துக்கு விமானத்தில் வந்த பிரதமர் நரேந்திர மோடி, அங்கிருந்து இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டரில் நேராக பாலாசோரில் விபத்துப் பகுதிக்கு சென்றார்.

அங்கு விபத்தில் சிக்கி சின்னாபின்னமாகியிருக்கும் ரயில் பெட்டிகளையும், துரித வேகத்தில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளையும் பிரதமர் நரேந்திர மோடி நேரில் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து உருக்குலைந்து சேதமடைந்து கிடந்த ரயில் பெட்டிகளை பிரதமர் பார்வையிட்டார்.

ரயில் விபத்து, மீட்பு பணி மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மோடி கேட்டறிந்தார். மத்திய அமைச்சர்கள் அஸ்வினி வைஷ்ணவ், தர்மேந்திர பிரதான் மற்றும் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

ஆய்வு செய்த இடத்தில் இருந்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் அமைச்சரவை செயலாளருடன் பிரதமர் நரேந்திர மோடி பேசினார். அப்போது, காயம் அடைந்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளையும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள், அசௌகரியத்தை எதிர்கொள்ளாமல் இருக்க சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளவர்களை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து ஆறுதல் கூறினார்.

## ஒடிசா ரயில் விபத்து...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில், துயரமான இந்த தருணத்தில் அயல் நாடு என்ற வகையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் இந்தியாவுடன் கைகோர்த்து நிற்கிறோம் எனவும் உறுதியளித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேநேரம், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## பொது பாதுகாப்பு...

நீதிமன்றில் உண்மைகளை அறிவிக்கவுள்ளதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை புலனாய்வாளர் தாக்கிச் சுட முயற்சி செய்ததாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பாக காணொளிகள் வெளியாகி இருந்தன. கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வடமராட்ச்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மக்களைச் சந்தித்துக் கொண்டிருந்த போதே இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

## 12.5 Kg லிட்ரோ....

12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் திருத்தப்பட்ட புதிய விலை 3186 ரூபாவாகவும், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 1281 ரூபாவாகவும், 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 598 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை குறைப்பு, தேசிய மட்டத்தில் ரூபாவின் பெறுமதி ஸ்திரப்படுத்தல், டொலரின் பெறுமதி குறைப்பு ஆகிய காரணிகளை அடிப்படையாக கொண்டு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, புதிய விலை நிர்ணயம் இன்று முதல் அமுல்படுத்தப்படும். சந்தையில் பற்றாக்குறை இல்லாமல் சிலிண்டர்களை விநியோகிக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரியான முதித பீரிஸ் தெரிவித்தார்.

மாதாந்த எரிவாயு விலை சூத்திரத்துக்கு அமைய கடந்த மாதம் (மே) 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 100 ரூபாவினாலும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 40 ரூபாவினாலும், 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 19 ரூபாவினாலும் குறைக்கப்பட்டது.

## முல்லைத்தீவில் 29,000 ...

கட்டுப்பாட்டிலுள்ள நந்திக்கடல், கொக்கிளாய், சுண்டிக்குளம், நாயாறு ஆகிய இடங்களிலும் மக்கள் பாவனைக்குக் காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வன உயிரிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் சமந்தி, வன உயிரிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள, வன வளத்திணைக்களத்தின் நாயகம், மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.குணபாலன், மாவட்ட உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## அதிக உஷ்ண....

ஏற்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர்சிறுவர்களை அதிக வெயிலில் விடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் முடிந்தளவு நீரை.பருகச் செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இத்தகைய தோல் சம்பந்தமான நோய்களிலிருந்து சிறுவர்களைபாதுகாப்பதில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## லாப் Gas விலைகளும் ...

தொடர்பில் இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் எல்.பி. கேஸ் விலை அதிகரித்திருந்ததால் உற்பத்தி மற்றும் விநியோக செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் சமையல் எரிவாயுவின் விலைகளை குறைக்க முடியாது என அந்த நிறுவனம் கடந்த மாத முதல் வாரத்தில் அறிவித்திருந்தது. அந்த வகையில் சந்தையில் 12. 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3990 ரூபாவாகவும் 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1596 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய நிலையிலேயே இன்று முதல் மேலும் விலைக் குறைப்பை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விடைத்தாள்...

தராதர சாதாரண தரப் பரீட்சையின், அழகியல் பாடவிதானங்களின், செயன்முறைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான முழுமையான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடவிதானங்களின், செயன்முறைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஆசிரியர்கள் பங்கேற்பதில் தாக்கம் ஏற்படுவதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதேநேரம், 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாக கூறப்பட்ட நிலையில், சாதாரண தரம் , உயர்தரம் மற்றும், புலமைப்பரிசில் பரீட்சை ஆகியனவற்றின் விடைத்தாள் மதிப்பீட்டுக் கொடுப்பனவாக, 2 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை வழங்கப்பட வேண்டியுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## ஏரியில் மூழ்கி இரு...

சம்பவத்தில் 17 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். தெஹியத்தகண்டி ஹெனானிகல பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் (3) 50 பேர் கொண்ட குழுவொன்று பஸ்ஸில் சென்றதாகவும் அதில் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த இரண்டு இளைஞர்களும் மற்றுமொரு குழுவினருடன் நேற்று நீராடச் சென்ற போது நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். நீராடும் போது ஏனையவர்களின் அலறல் சத்தம் கேட்டு பிரதேசவாசிகள் வந்து இரு இளைஞர்களையும் மீட்டு தெஹியத்தகண்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். தெஹியத்தகண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது.

# மானுடவியல்

## சாக்கிய நாயனார்



118

அந்நிலையிற் சிவத்தின் அகண்டவியாகபத் திறந்தமக்கு விளங்கும் விசேடத்தினாலே எந்தச் சமயத்தினிருப்பும் எந்த வேடத்தினமைப்பும் சிவனருள் வியாகபத்திற்கப்பாலில்லை எனுந் துணிவினராய், வேடமன்று; சிவன் தாளிற் பொருந்தும் அயரா அன்பே பொருள் எனக் கொண்டு பௌத்த வேடமே பின்னுந் தம் வேடமாக உலாவுவாராயினர். அது, சேச்சிழார் வாக்கில், "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் மன்னிய சீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே துன்னிய வேடந்தன்னைத் துறவாதே தூயசிவந் தன்னை மிகு மன்பினால் மறவாமை தலைநிற்பார்." எனவரும்.


"விரிந்தனை குவிந்தனை விளங்குயி ருமிழ்ந்தனை" எனத் திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் வருவதற்கொப்ப, சிவவியாபகம் விபுவாய்ப் பொருந்தி எங்கும் பரந்து குவிந்திருக்கும் நிலையை, சிவன் தானே, உள்ளத்தைக் கோயிலாக்கிக் கொண்டிருக்கும் உத்தமர்களிடத்திற் பதித்துவைக்கும் ஒருவித அருட்குறியே சிவலிங்கமாம். அது, "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம் வள்ளற் பிரானுக்குவாய் கோபுரவாயில் தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே" எனத் திருமந்திரத்திலும் "சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச் சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி" என விநாயகரகவலிலும் வருவன கொண்டறியப்படும்.



நிலத்திற் காணும் முளையொன்று, கட்புலப்படாது நிலத்துள் மறைந்திருக்கும் அதன் முன் நிலையாகிய விதையையும், கட்புலப்பட உருத்துவரும் அதன்பின் நிலையாகிய செடியையும் உணரக் காரணமாயிருத்தல் போன்று அருட்குறியாகிய இச்சிவலிங்கமானது, சிவத்தின் மற்றிரு நிலைகளாக, கட்புலப்படா அருவும், கட்புலப்படும் உருவும் எனவுள்ள அவ்விரு நிலைகளையும் உணரக் காரணமாய் நிற்றலின் அருவுருவம் எனவும் பெயர்பெறும். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

### சிவஸ்ரீ சுந்தரேஸ்வரன் சர்மா



இரத்தினபுரி மாவட்டத்தில் தும்பறையில் பிறந்த இங்கிரிய தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுருவாகிய சிவஸ்ரீ. சுந்தரேஸ்வரன் சர்மா இறைவனின் திருவடியை எய்தி விட்டார். மத குருவாக இருந்து கொண்டு மாணாக்கருக்கு நல்வழி காட்ட வேண்டும் என்ற நன்னோக்கோடு அறநெறிக் கல்வியை போதித்த வந்தவர், சமூகம் சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என்ற நன்னோக்கோடு சமூக சேவைகள் பல ஆற்றி வந்தவர். தும்பறையில் பிறந்த இவர் தும்பறை தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். மலையக தோட்டங்களுக்கு சென்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சமய அறிவை போதித்து வந்தவர்.




# மட்டக்களப்பு பெரியகல்லாறு

# ஸ்ரீ கடல்நாச்சி அம்பாள் ஆலய வைகாசி திருச்சடங்கு உற்சவம்

**மட்டக்களப்பு பெரியகல்லாறு ஸ்ரீ கடல்நாச்சி அம்பாள் ஆலய வைகாசி திருச்சடங்கு உற்சவம் 05.06.2023 ஆம் திகதி திட்கட்கிழமை திருக்கதவு திறந்தலுடன் ஆரம்பமாகி மறுநாள் 06.06.2023ஆம் திகதி செவ்வாய்க்–கிழமைவங்கக் கடலில் கும்பம் சொரிதலுடன் திருச்சடங்கு நிறைவு பெறவிருக்கின்றது.**



05.06.2023 காலைஉதயத்தில் அம்பாளின் திருக்கதவு திறத்தலுடன் காலை 8.00 மணிக்கு சர்வார்த்த ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து பவனி இடம்பெறுவதுடன் மு.ப 10.00 மணிக்கு வட்டுக்குத்தல் நிகழ்வு இடம்பெறும் பி.ப 12.30 மணிக்கு விசேட அலங்கார பூசையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறுவதோடு பி.ப 2.30 மணிக்கு சர்வார்த்த ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் இருந்து கடல்நாச்சித் தாயாரின் முகக் களை தாங்கிய பேழை மிகக் கோலகாலமாக எடுத்துவரப்படும் அதனை தொடர்ந்து மடைகள் நிகழ்வு இடம் பெறும். மாலை 7.00 மணிக்கு முதல் பாளை விற்பனை நிகழ்வு இடம்பெறும். பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக்கழகம் முன்னின்று நடத்தும். நள்ளிரவு 12.00 மணிக்கு அம்பாளின் அதியுன்னத நிகழ்வான பூரணகும்பம் நிறுத்தும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து அங்கப்பிரதட்சனை செய்தல் ஆராத்தி எடுத்தல் .பிள்ளை விற்றுவாங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.தொடர்ந்து

06.06.2023 ஆம் திகதி செவ்வாய்கிழமை அதிகாலை 4.00மணிக்கு சம்பூரண பூசையைத் தொடர்ந்து ஆடுதல் நிகழ்வு நடைபெறும் .காலை 6.00 மணிக்கு கடலில் கும்பம் சொரிதல் நிகழ்வுடன் உற்சவம் நிறைவுபெறவிருக்கின்றது. நிகழ்வுகள் யாவும் சிவத்திருத அரசன் பூசகர் தலைமையில் நடைபெறவிருப்பத்துடன் உதவிப் பூசகர் சிவத்திருஅ.கிரிசாந் அவர்களும் இணைந்து பணியாற்றவுள்ளார்.

ஆலய வரலாறு–மட்டக்களப்பின் தெற்கே முப்பத்திரண்டு(32) கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது பெரியகல்லாறு ஆகும். கடலும் கடல் சார்ந்து நெய்தல் நிலமாக மண்வாசனை மாறாமல் இன்றும் மக்கள் பொலிவுடன் வாழ்கின்றார்கள். கல்விவளமும் வற்றாமல் பல சமூகங்கள் இணைந்து வாழும் இக்கிராமத்தில் கடலாச்சியம்மன் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

கடலும் கடல் சார்ந்துள்ள இடத்தில் இந்தியாவில் காவேரிப்பூம் பட்டினம் அமைந்துள்ளது.

அங்கு வாழ்ந்த மக்கள் பன்நாட்டு வணிகம் செய்த வரலாற்றை பழந்தமிழ் இலக்கியங்கள் அடையாளம் காட்டுகின்றது. அங்கு தொன்மையான தொல்குடி மக்கள் என்று குறிப்பிடுகின்ற பரதவர்கள் வாழ்ந்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது. இந்த பரதவர்களின் பண்பாட்டை கே.ஈ.டீ.குரூஸ் எழுதிய 'ஆழ்சூழ்உலகு' என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இவர்களின் குலதெய்வங்கள் குமரியம்மன் முத்தாரம்மன் சந்தானமாரியம்மன் கடலம்மன் என்று குறிப்பிடுகின்ற தெய்வங்களாகும்.

க.தமிழ்செல்வியின் நூலில் ஆறுகட்டுத்துறை என்னும் நூலில் கடலைத் தெய்வமாக வழிபடும் முறையும் காட்டப்பட்டுள்ளது. சாதி, மத, இன, பேதமின்றிகடற்கரையில் வாழ்கின்ற மக்கள் கடலம்மாள் என்று கையேந்தி வழிபட்டதை இந்நூல் வெளிக்காட்டுகின்றது. பரதவர் குலத்து வம்சத்தில் தோன்றி மீகாமன் ஒரு சிற்றரசன் இவர் கடல் வீரன் கண்ணகியின் கால் சிலம்புக்கு நாகமணி பெறுவதற்குகடல் கடந்து சென்று பெற்றுக் கொடுத்த மாவீரன் இவ்வம்ச குலத்தவர்கள் கடற்தொழில் செய்பவர்கள் கடலம்மனைக் குலதெய்வமாகக் கொண்டார்கள். இவர்களில் சிலர் வழமைபோல் கடற்தொழிலுக்குப் படகு மூலம் கடலுக்குச் சென்றுள்ளார்கள் என்றும் அந்தநேரம் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதாகவும் படகு கடலில் அள்ளுண்டு கரைசேர முடியாமல் தத்தளித்து துன்பப்பட்டார்கள் என்றும் சொல்லப்படுகின்றது . அவ்வேளை படகில் இருந்தவர்கள் குலதெய்வமான கடலம்மனைக் கையேந்தி

கடலம்மாளே எங்களை காப்பாற்று என்று வணங்கினார்கள் அந்தநேரம் கடலம்மை ஒளிவடிவத்துடன் காட்சி கொடுத்து கிழக்குக் கரையை நோக்கி படகை இழுத்து வந்து மட்டக்களப்பு கல்லாற்றுக் கரையை அடைந்ததாகவும் கர்ணபரம்பரைக் கதையொன்று எடுத்து இயம்புக்கின்றது

' நா. நவநாயகமூர்த்தி தொல்லியல் ஆய்வியலாளர் தனது ஆய்வு நூலில் தமிழகத்திலிருந்து இலங்கையில் மட்டக்களப்பு கல்லாறு கடலம்மன் ஆலயம் முதன் முதலாக தோன்றியதனால் மற்றைய இடங்களுக்குப் பரவியிருப்பதாக இலக்கியப்பாடல் மூலம் வெளிப்படுகின்றது.

**'கண்டந்தக் கன்னியர்கப்பலேறிக்**
**கல்லாற்று மட்டக்களப்பிலிறங்கி**
**வந்தாள் கன்னியர் வந்தாள்**
**மழைமாரி பொலிந்திட வந்தாள் வந்தாள்'**

மேலும் கல்லாறு நகரில் கடலம்மன் பதி கொண்டவற்றை குளுர்த்திப் பாடலிலே குளுர்ந்தருள்வாய்

கலைச்சுடர், இலக்கியவித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன் (JP)
ஓய்வு நிலை அதிபர்
களுவாஞ்சிகுடி





கண்டி அலவத்துகொட நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக பெருந்சாந்தி பெருவிழா நிகழ்வுகளை படங்களில் காணலாம். நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19662) கோயிலில் முதலில் யாரை தரிசிக்க வேண்டும்?**

மூலவரை தரிசித்து வலம் வரவேண்டும்.

**19663) அடுத்து யாரை தரிசித்து வலம் வர வேண்டும்?**

அம்பாள் மற்றும் பரிவாரங்களை தரிசித்து வலம் வரவேண்டும்.

**19664) மூன்றாவது யாரை தரிசித்து வலம் வரவேண்டும்?**

நவக்ரஹம், சண்டிகேஸ்வரர், பைரவர் ஆகியோரை தரிசித்து வலம் வரவேண்டும்.

**19665) யாகத்தீயில் பட்டு வஸ்திரம், பழவகைகள், நாணயம் இவைகளை இடுவதால் என்ன பயன்?**

இந்தப் பொருட்கள் ஆகுதிப் புகையாக சூரியனைச் சென்றடைந்து மேகமாக மாறி மழையாக நமக்குக் கிடைக்கிறது. யாகத்தில் இட்ட பொருட்கள் பல்லாயிரம் மடங்காக விளைகிறது என்கிறது தர்ம சாஸ்திர ஸ்லோகம்.

**19666) கடவுளின் படம் அல்லது சிலை எது வழிபாட்டிற்கு உகந்தது?**

மனதில் இறைவனை நிறுத்தி வழிபடுவது மிக உயர்ந்தது. இரண்டாவது சிலை, அடுத்தது படம். முதலில் கூறியதற்கு மன ஒருநிலைப்பாடு அவசியம். உலக வாழ்க்கையை வெறுத்து வேறு எந்த சிந்தனையும் இல்லாத ஞானிகளுக்கு மட்டுமே இது சாத்தியம். உருவச்சிலை வழிபாட்டில் அபிஷேகம், நைவேத்யம் ஆகிய கிரியைகள் அதிகம். அவசரமான காலகதியில் எல்லோருக்கும் இயலாது. பட வழிபாடு எளிமையானது. தினமும் புஷ்பம் சாத்தி, பழம், பால், கற்கண்டு நிவேதனம் செய்தால் போதும். எது உயர்ந்தது என்று கவலைப்படுவதை விட, எது இயன்றது என்று முடிவெடுத்து, அதை விடாமல் செய்வது தான் உயர்ந்தது

**19667) கிரகண வேளையில் கோயில் நடை சாத்துகிறார்கள். அந்நேரத்தில் வீட்டில் விளக்கேற்றி வழிபடலாமா?**

அந்நேரத்தில் கோயில்களில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட வேண்டும் என்றே சாத்திரங்கள் கூறுகிறது.

அந்நேரத்தில் வீட்டில் விளக்கேற்றி ஜபம் செய்தால் மிக விசேஷம். ஒரு ஜபம் ஆயிரம் மடங்கு ஜபம் செய்வதற்குச் சமம்.

## "யுகரிஷியின் ஆன்மீக சிந்தனைகள் - 41



இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாப நட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வ சக்தி மிகுந்து காணப்படும்.வெளிப்புற உதவிகளை புறந்தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. இவ்வகையில் மனிதன் அளப்பரிய சக்தி கொண்டவனாவான்.





கொழும்பு, ஜெயந்திநகர், ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வைகாசி விசாக தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.
படங்கள் வடகொழும்பு தினகரன் நிருபர்







வத்தளை, ஹெகித்தயில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு இடம்பெற்ற இலட்சநாம அர்ச்சனை பூர்த்தி பூஜைகளில் கலந்துகொண்ட ஆலய பிரதம குரு சிவஸ்ரீ யோகேஸ்வர சுபாஸ்கர சிவாச்சாரியார், நீர்வேலி ரமணன் குருக்கள், கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா, குருக்கள் ரமணன் பட்டர், சர்வ சாதகாசாரியார் ஜனா ஸ்ரீவட்ஷன் சர்மா மற்றும் வவுனியா யோகீஸ்வர ஞானம் குருக்கள் ஆகியோரையும் பூஜை நிகழ்வுகளையும் படத்தில் காணலாம்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22



### குறள் தரும் சிந்தனை

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு**

எழுத்துக்கள் எல்லாம் அகரம் என்னும் ஒலி எழுத்தை முதலாகக் கொண்டுள்ளன. அது போல, உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் ஆதியாகிய கடவுளை முதலாகக் கொண்டுள்ளன.

## மத நல்லிணக்கத்திற்கு தீங்குகள் ஏற்படுவதை கட்டுப்படுத்துவதில் கவனம்

நாட்டின் மத நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து இனங்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்தி நாட்டை மீண்டும் அழிவுப்பாதைக்கு கொண்டு செல்லும் வகையில் சில தனிநபர்களும் குழுக்களும் திட்டமிட்டு செயற்படுவதாக' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கப் பெற்றுள்ள புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்படும் நபர்கள் மற்றும் குழுக்களுக்கும் எதிராக கடும் நடவடிக்கையை எடுக்கத் தேவையான ஏற்பாடுகள் குறித்து பொலிஸ் மாஅதிபருடன் கலந்துரையாடி மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருக்கு ஜனாதிபதி ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு படைகளின் பிரதானிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ள ஜனாதிபதி, 'மத நல்லிணக்கத்திற்கு கெடுதல் செய்பவர்கள் நாட்டுக்கு புற்றுநோயாகவே இருப்பர். அதனால் பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து நாட்டில் மத நல்லிணக்கத்திற்கு எதிராக செயற்படும் குழுக்களையும் அவர்களுக்கு பின்னால் இருப்பவர்களையும் விரைவாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் பணிப்புரை விடுத்துள்ளார்.

பல மதங்களைக் கடைபிடித்து ஒழுகும் பல்லின மக்கள் வாழும் நாட்டில் மத நல்லிணக்கத்திற்கு கெடுதல் ஏற்படுத்த முயற்சிப்பது பாரிய குற்றமாக நோக்கப்பட வேண்டும். மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதன் ஊடாக நாட்டின் சுபீட்சமும் முன்னேற்றமும் சீர்குலையும். அதற்கு ஒரு போதும் இடமளிக்கப்படலாகாது. அற்ப நலன்களை அடைந்து கொள்ளும் நோக்கில் சில தீய சக்திகள் இவ்விதமான முயற்சிகளை முன்னெடுக்கலாம். சமூக பொருளாதார ரீதியில் நாடு முன்னேற்றப்பாதையில் பயணிப்பதை விரும்பாத சக்திகளின் நிகழ்ச்சி நிரலின் பின்புலத்தில் தான் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பது தான் சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டின் மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து விட்டால் அந்நாட்டை அழிவுப்பாதைக்கே இட்டுச்சென்றுவிட முடியும். இதற்கு உலகின் பல பகுதிகளிலும் உதாரணங்கள் உள்ளன. இவ்வாறான செயலில் ஈடுபடும் சக்திகளுக்கு நாட்டினதோ, மக்களினதோ நலன்கள் முக்கியமானவை அல்ல.

ஜனாதிபதி குறிப்பிடுவது போன்று அவர்கள் புற்றுநோயேயாவர். அதனால் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முன்னெடுக்கப்படும் முயற்சிகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். நாட்டில் நிலவிவரும் மத நல்லிணக்கம் நீடித்து நிலைக்கவும் அதனைப் பாதுகாத்து மேலும் பலப்படுத்தவும் ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இதேவேளை மத நல்லிணக்கத்திற்கு எதிராக செயற்படும் நபர்கள் குறித்து கண்காணிக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் என 2015 இல் ஸ்தாபிக்கப்பட்ட விஷேட பொலிஸ் பிரிவை மீண்டும் ஆரம்பிக்கவும் உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி, பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து வலுவான ஒரு பிரிவை உருவாக்குவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டி இருக்கிறார் ஜனாதிபதி. இந்நிலையில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய முப்படையினரையும் ஒன்றிணைத்த பிரிவை உருவாக்கி மத நல்லிணக்கத்திற்கு கெடுதல் செய்ய முயற்சிக்கும் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க பாதுகாப்பு பிரதானிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், 'மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்தி நாட்டில் தற்போது நிலவும் அமைதி நிலையை குழப்பும் நோக்கில் செயற்படுபவர்களுக்கு எதிராக அரசியலமைப்பின் 09 வது அத்தியாயம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் 291 (அ), (ஆ) பிரிவுகளின் பிரகாரம் சட்டத்தை கடுமையாக செயற்படுத்தப் பின்நிற்கப்போவதில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சூழலில் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ, 'நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மதங்களை அவமதிக்கும் விதமாக கருத்துக்களையும் அறிக்கைகளையும் வெளியிடாமல் இருப்பது ஒவ்வொருவரினதும் பொறுப்பு. அதனை மீறி செயற்படுவதால் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமாயின் அதன் விளைவுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டும்' என்றுள்ளார். ஆகவே மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து அற்ப நலன்களை அடைந்து கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சி சட்ட ரீதியில் கடுமையான விளைவுகளை கொண்டு வரக்கூடியனவே. அதனையே ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் அறிவுறுத்தல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதனால் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் மத நல்லிணக்கத்தை பேணிப் பாதுகாக்கவும் அதனை மேம்படுத்தவுமே பங்களிக்க வேண்டும். அது நாட்டின் மேம்பாட்டுக்கும் சுபீட்சத்துக்கும் பக்க துணையாக அமையும். நாட்டில் நிலவும் அமைதி நிலையை குழப்புவதற்கு எவரும் துணைபோகலாகாது.

editor.tkn@lakehouse.lk

# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதே மக்களின் தேவை

## தேசிய சட்ட மாநாட்டில் ஜனாதிபதி

**தற்போதும் இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். பாராளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50% பலத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற 2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டம், ஒழுங்கு, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தக்மை ஏற்பட்டிருப்பதால் நெருக்கடியிலிருந்து இலங்கை முற்றாக மீண்டுவிட்டது என்று கருத முடியாது. என்றாலும் இச்செயன்முறையின் வெற்றிக்கு எதிர்காலத்தில் பாரிய அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

கடந்த பத்து மாதங்களுக்கு முன்பாக இலங்கை முன்னொருபோதும் காணாத பொருளாதார நெருக்கடியை கண்டது. அந் நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கான முயற்சிகளை தாம் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்திருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் உரையாற்றுகையில், தேசிய சட்ட மாநாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றி ஆராயப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். அதற்காக நுவரெலியா தெரிவு செய்யப்பட்டமையும் பொருத்தமானதென கருதுகிறேன். கோப்பி நடுகை மற்றும் பெருந்தோட்ட பொருளாதாரத்தை ஆரம்பித்து வைத்தவர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த ஆளுநர் எட்வட் பான்ஸுக்கும் நுவரெலியாவில் வீடொன்று காணப்பட்டது.

கடந்த 10 – 11 மாதங்களுக்கு முன்பாக வலுவிழந்த நாடாக மாறிவிடும் வகையிலான நிலைமைகளை கடந்து வந்துள்ளோம். எவ்வாறாயினும் தற்போது சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையும் உருவாகியுள்ளது. இந் நிலைத்தன்மை குறுகிய காலத்திற்குரியது என்பதால் நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும்.

முன்னொருபோதும் காணாத வகையிலான சவாலை இந்நாட்டின் பொருளாதாரம் கடந்த பத்து மாதங்களுக்கு முன்பாக எதிர்கொண்டது. இருப்பினும் சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டதென கூற முடியாது.

தற்போதும் பெரும்பாலான பொதுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர். பாராளுமன்றம், நீதிமன்றம், ஊடகம், தனியார் துறை, தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், நமது நாட்டின் பொதுமக்கள் மற்றும் அரச நிர்வாக கட்டமைப்பு மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

**பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உரையாற்றுகையில்,** 'கடந்த சில வருடங்களில் பல சவால்களுக்கு மத்தியிலும் சட்டத்தரணிகள் சங்கம் தனது உறுப்பினர்களை ஒன்று திரட்டி பல்வேறு கருப்பொருள்களின் கீழ் மாநாடுகளை நடத்தியுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான அதன் கருப்பொருள், சட்டத்தொழிலின் இயலுமையை மீள்கட்டமைத்தல் மற்றும் இசைவாக்கமடைதல் அதன் பின்னர் இவ்வாண்டின் தொடக்கத்தில், ஒரு நெருக்கடியின் ஊடாக பயணித்தலில் சட்டத்தின் வகிபங்கு என்ற கருப்பொருளின் கீழ் நாங்கள் ஒன்றிணைந்தோம்.

கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, நாம் அனைவரும் முன்னொருபோதுமில்லாத சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆனால் இந்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்குத் திரும்பவும், முன்னேறவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது நம் அனைவரின் பொறுப்பு என்று நாங்கள் நம்புகிறோம்' என்று கூறினார்.

**சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன உரையாற்றும் போது,** 'தேசிய சட்ட மாநாடு, வழமையாக சட்டத்தொழில் தொடர்பான தினசரி தோன்றும் விடயங்கள் பற்றி கலந்துரையாடவே அர்ப்பணித்துள்ளது. இருப்பினும், இவ்வாண்டுக்கான தேசிய சட்ட மாநாடு 2023/2024 வேறுபட்ட அணுகுமுறையை எடுத்துள்ளது. நாட்டின் தேசிய நலன்களுக்காகவும் சிறந்த எதிர்காலத்திற்காகவும் சட்டத்தரணிகள் சமூகத்தின் வகிபங்கு பற்றி கலந்துரையாட இம்மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.



இம்முயற்சியில் பல தரப்பினருடன் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். முன்னெப்போதையும் விட நமது நாடு, அரசியல் மற்றும் பொருளாதார சவாலை எதிர்கொண்டுள்ளது என்பது இரகசியமல்ல. எனவே, நாட்டில் அத்தியாவசியமான சட்டக் கட்டமைப்பும் சுதந்திரமான நீதித்துறையும் இருப்பது அவசியம்.

சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதற்கும், நாட்டை எதிர்பார்க்கும் திசையில் நகர்த்துவதற்கும், தொலைநோக்கு மற்றும் ஒழுக்க நெறியுடைய, ஜனநாயகத்தை மதிக்கும் மற்றும் நமது குடிமக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், தலைமையொன்று அவசியம்.



எங்கள் தொழில் வரலாற்றில் முதன்முறையாக, சட்டத் துறையில் மறுசீரமைப்பு செய்யவேண்டிய அல்லது திருத்தப்பட வேண்டிய பகுதிகள் குறித்து அனைத்து தரப்பினர்களுடனும் கலந்துரையாட, தேசிய சட்ட மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.

நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதைப் போன்று, இலங்கையை வளர்ச்சியடையும் நாட்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த நாடாக முன்னோக்கிக் கொண்டு செல்லும் சட்டங்களை எமது சட்டக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துவதற்கும், அதற்காக சட்டங்களை இயற்றுபவர்களுக்கு உந்துதல்களை ஏற்படுத்தத் தேவையான ஆதரவையும் விழிப்புணர்வையும் இம்மாநாட்டின் மூலம் வழங்குவதே எமது நோக்கமாகும்' என்று தெரிவித்தார்.

**தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பைசர் முஸ்தபா,** 'இன்று ஒரு தேசமாக நாம் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறோம். இது சட்டத்தரணிகள் சமூகத்தை ஒன்றிணைக்கும் மாநாடு மாத்திரல்ல. நாடு மற்றும் பொருளாதாரத்தை மீட்பதற்காக வேண்டி, கொள்கை வகுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினருக்கு இடையேயான கருத்துப் பரிமாற்றத்தின் தொடக்கமாக இம்மாநாட்டை நடத்த நாங்கள் முடிவு செய்தோம்.

ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம். மேலும், தொழில் மற்றும் தொழில்முனைவோர் சட்டத்தின் ஆட்சியை ஏற்க வேண்டும்.

இவ்விடயத்தில் நிரந்தரமான தீர்வுகளை காண்பதில் அரசியல் தலைமைகளையும் ஈடுபடுத்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் இம்மாநாட்டின் வெற்றிகரமான முடிவுகளை எம்மால் பெற முடியும்."என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் சஞ்ஜய் ராஜரத்தினம், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். சமரதுங்க, முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு

# சிவசிதம்பரம் நினைவு தினத்தில் ஊரவனின் இளமைக்கால மனக்காட்சி

**தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம்பரம் மறைந்து இன்றுடன் 21 வருடங்கள் கடந்தோடிவிட்டன.**

வடமராட்சியின் கரவெட்டி நெல்லியடியில் பஸ் நிலையம் முன்பாக அமைந்திருக்கும் அவரின் உருவச்சிலைக்கு இன்று காலை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறுகிறது.

சிவசிதம்பரத்தை அன்புடன் எல்லோரும் 'சிவா' என்றே அழைப்பார்கள். அவரை நினைவுகூருவது என்பது கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தமிழர் உரிமைப்போராட்டத்தை வழிநடத்திய மிதவாத தலைவர்களில் ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு அப்பால் அவரின் கரவெட்டியைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரை சொந்த ஊரின் பிரமாண்டமான அடையாளங்களாக விளங்கிய ஆளுமைகளில் ஒருவரின் நினைவைக் கொண்டாடுவதுமாகும்.

இன்றைய தினத்தில் எமது இளமைக்காலத்தில் நாம் கண்ட அவர் மனக்கண் முன்வந்து நிற்கிறார். அதனால் இந் தப்பதிவைச் செய்யவேண்டும் என்று உந்துதல் பிறந்தது.

சிவா ஐயாவுக்கு நான் நிறையவே அறிமுகமானவனல்ல. ஆனால், அவருடைய வாழ்வின் கணிசமான காலகட்டத்தை அவதானிக்கும் வாய்ப்பைப் பெற்றவனாக நான் இருந்து வந்திருக்கிறேன். அதற்கு இரு காரணங்கள். 'ஒன்று நான் சிவா ஐயாவின் பிறந்த மண்ணைச் சேர்ந்தவன். இரண்டாவது நான் ஒரு பத்திரிகையாளன். அதனால், அரசியல் நிகழ்வுப்போக்குகளை அவதானிக்கவேண்டிய தொழில்சார் தேவையின் நிமித்தம் அவரின் செயற்பாடுகளை அறிந்தவனாக இருக்கிறேன்.

'1960 களின் நடுப்பகுதியில் இருந்து நான் சிவா ஐயாவை அறிவேன். அவர் முதற் தடவையாக 1960 மார்ச் பொதுத் தேர்தலிலும் ஜுலை பொதுத்தேர்தலிலும் உடுப்பிட்டி தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டபோது எனக்கு நான்கு வயது. 1965 பொதுத் தேர்தலில் மீண்டும் அதே தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டபோது எனக்கு ஒன்பது வயது. அரசியல் பற்றி எதையும் அறியாத வயது. ஆனால், 1965-1970 காலகட்டத்தில் எமது ஊரில் அவர் கலந்துகொண்ட அரசியல் கூட்டங்களுக்கும் வேறு வைபவங்களுக்கும் ஒரு சிறுவனாக என்னைவிட மூத்தவர்களுடன் புதினம் பார்க்கச் சென்றேன்.

அடுத்துவந்த வருடங்களில் குறிப்பாக 1970 மே பொதுத் தேர்தலின்போது பிரசாரங்களுக்காக சிவா ஐயா தனது ஆதரவாளர்களுடன் எமது ஒழுங்கையின் ஊடாக நடந்து வந்தபோதெல்லாம் வெறுமனே அரைக்காற்சட்டையை அணிந்த பையனாக பின்னால் ஓடிச் சென்றிருக்கிறேன். ஜீ.ஜீ.பொன்னம்பலமும் சிவா ஐயாவும் எமது ஒழுங்கையால் மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட காட்சி மனத்திரையில் மங்கலாக நிழலாடுகிறது.



சிவாவுக்கு ஜே' என்பது நான் நினைவுகூரும் அந்தக்கால கட்டத்தில் உடுப்பிட்டித் தொகுதியின் கிராமங்களில் அதுவும் குறிப்பாக கரவெட்டியிலும் அதை அண்டிய கிராமங்களிலும் எனது வயதையொத்த சிறுவர்களுக்குத் தெரிந்த ஒரேயொரு அரசியல் கோஷம்.

எனது வீட்டுக்கு அண்மையாக வாழ்ந்த இரத்தினம் அண்ணனின் நீல, வெள்ளை ஹில்மன் காரில் தான் சிவா பயணம் செய்வார். கொழும்பில் இருந்து ஊருக்கு வந்து நிற்கும் நாட்களில் அவர் அந்தக்காரில் வலம்வரும் போது எமது கண்ணில் பட்டால் எம்மை அறியாமலேயே நாம் சிவாவுக்கு ஜே என்று சத்தம் போடுவோம். அனேகமாக ஒவ்வொரு வார இறுதியிலும் சிவா ஐயா ஊருக்கு வருவார். அவர் கொழும்பு திரும்பிய பிறகு இரத்தினம் அண்ணன் காரை ஓட்டிச்செல்லும் வேளைகளிலும் அதைக் கண்டவுடனேயே நாம் சிவாவுக்கு ஜே சொல்வோம். சிவா இல்லாத காருக்கு நாம் கூறிய ஜே தனக்குரியது என்று இரத்தினம் அண்ணன் தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டாரோ எமக்குத் தெரியாது. நோய்வாய்ப்பட்ட எவரையாவது அவர் காரில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்கு சென்றாலும் எமது சிவாவின் ஜேயில் இருந்து தப்பிவிட முடியாது. சில பெரியவர்கள் நாம் அவ்வாறு செய்ததற்காக வேலியில் உள்ள பூவரசம் தடியைப்பிடுங்கி எம்மை அடித்துவிரட்டிய அனுபவமும் எமக்குண்டு.

எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் தச்சந்தோப்பு பிள்ளையார் கோவில் திருவிழா காலத்தில் சிவாஜயா சில சமயங்களில் காரில் வராமல் பெரியதோட்டத்தில் இருக்கும் தனது வீட்டில் இருந்து நடந்தே வருவார். அவரின் நடையில் இருந்த கம்பீரத்தை ரசித்தவர்களை நான் அறிவேன். அழகான மாப்பிள்ளைகள் பற்றிப் பேசுவதானால்' அடியே அவன் சிவசிதம்பரம் மாதிரி' என்று, எமது கிழவிகள் பேசுவதையும் நான் தாராளமாகக் கேட்டிருக்கிறேன். தச்சந்தோப்பு கோவிலில் திருப்பணிக்கு என்று கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்த பாரிய கருங்கற்களின் மேல் சிவா ஐயாவும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் அமர்ந்திருந்து அளவளாவுவது ஒரு கண்கொள்ளாக்காட்சி. இருவருமே நல்ல சிவத்த நிறத்தவர்கள். அத்துடன் ஆஜானுபாகுவான உடலமைப்பைக் கொண்டவர்கள். தூரத்தில் நின்று அவர்கள் இருவரையும் நாம் பரவசத்துடன் பார்த்த நாட்களை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.


மாற்றுக் கொள்கையுடையவர்கள் கூட மதித்த ஒரு கண்ணியமான அரசியல் தலைவர் சிவா ஐயா. இன்றைய அரசியல்வாதிகளுடன் ஒப்பிடும் போதுதான் அவரின் மேன்மை பிரகாசமாக வெளிப்படுகிறது. இளைஞர்களானதும் எங்களில் சிலர் சிவா ஐயாவின் அரசியலைப் பின்பற்றி ஆதரித்தோமா இல்லையா என்பது வேறு விடயம்.

இறுதிக்காலத்தில் சிவா ஐயா தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக மீண்டும் பாராளுமன்றத்துக்கு வந்தததை முன்னிட்டு 2002 பெப்ரவரியில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளை ஏற்பாடு செய்த கௌரவிப்பு வைபவத்தில் அவர் நிகழ்த்திய உரை தாங்கள் முன்னெடுத்த அரசியல் தமிழ் மக்களுக்கு அவலங்களைக் கொண்டு வந்துவிட்டதாக ஒரு கழிவிரக்கம் அவர் மனதில் ஏற்பட்டிருந்தது என்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

எது எவ்வாறிருந்தாலும் எமது காலத்தில் நாம் கண்ட தமிழ் அரசியல் தலைமை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்க ஒருவராக என்றென்றைக்குமே மறக்கமுடியாத ஒருவராக சிவா ஐயா விளங்குவார்.

வீரகத்தி தனபாலசிங்கம்

# கிழக்கின் குரல்



## பொத்துவில் கனகர் கிராம மக்களை மீள்குடியேற்ற ஏற்பாடு

இரண்டாம் கட்ட துப்புரவுபணி ஆரம்பம், பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் விஜயம்







(காரைதீவு குறூப் நிருபர்)

பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்கள், 1990களில் இடம்பெயர்ந்து 33 வருடங்களின் பின் மீள்குடியேற வசதியாக காடு மண்டி கிடந்த அப் பிரதேசம், இரண்டாம் கட்டமாக (3) சனிக்கிழமை துப்புரவாக்கும் பணி இடம் பெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அங்கு சமுகமளித்திருந்தார்.

இப் பிரதேசம் ஜே சி பி இயந்திரம் மூலம் துப்புரவாக்கப்பட்டு வருகிறது. பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமுக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன், அரச அனுமதியுடன் இப் பணியில் ஈடுபட்டு வருகிறார். கனகர் கிராம மக்களும் படையினரும் சமுகமளித்திருந்தனர்.

226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும்.

பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது.

## இன நல்லிணக்க அன்னதான நிகழ்வு



(ரொட்டவெவ குறூப் நிருபர்)

இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் முகமாக, AHRC நிறுவனத்தின் ஏற்பாட்டில் பொசன் தினத்தை முன்னிட்டு, மொராவெவ பிரதேச சிவில் வலையமைப்பினரின் ஒத்துழைப்போடு தன்சல் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (03) இடம் பெற்றது.

மூவின மக்களும் சேர்ந்து முன்னெடுத்த இந் நிகழ்வு, சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து நல்லிணக்கம் சார்ந்த கலந்துரையாடலுடன் தன்சல் வழங்கி வைக்கப் பட்டது.

## நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசத்தில் தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபை ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் விநியோக நடவடிக்கைகளில் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதால், பிரதேச மக்கள் நீர் விநியோகிக்கப்படும் ஒழுங்கில் நீரை பெற்றுக்கொள்ளுமாறு மூதூர் நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபை நிலைய பொறுப்பதிகாரியினால் சனிக்கிழமை (03) அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அன்றாட பாவனையாளர்கள் நீரை பெற வேண்டிய நிலையில் தற்போது மேற்கொள்ள வேண்டிய திருத்தப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. எனவே பிரதேச ரீதியாக நீர் விநியோகிக்கப்படும் முறை பற்றி அறிவிக்கப்பட்டுள்ள, நேர ஒழுங்கில் மட்டுப்படுத்தப்பட்ட பாவனையாக கொண்டு நீரை சேமித்து வைக்குமாறு பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்றில் நடைபெற்ற பொசன் உற்சவ நிகழ்வு



(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று இராணுவப்படையின் 241 கட்டளை பிரிவினரால் ஒழுங்குசெய்யப்பட்ட இவ்வருட பொசன் தன்சல் உணவுச்சாலையில் மாவட்டத்திலுள்ள மூவின மக்களும் கலந்து கொண்டனர்.

241 கட்டளைப் பிரிவின் இராணுவ கட்டளை அதிகாரி கேர்னல் தன்னிக்க பத்திரத்ன தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மல்வத்தை இராணுவப்படையின் இருபத்தி நான்காவது காலாட் படைப் பிரிவின் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டு உணவு சாலை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வுகளில் தமிழ், முஸ்லிம், மதத் தலைவர்கள், பள்ளிவாசல்கள், கோயில்கள் நம்பிக்கையாளர்கள் மற்றும் சிவில் சமுக அமைப்புகளின் பிரதிநிதிகளும் என பலரும் கலந்துகொண்டனர்.

'தன்சல்' உணவுச்சாலை நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகைதந்த மூவின மக்களுக்கும் உணவுகள் பரிமாறப்பட்டதாகவும், படையினருக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்கியதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

பொசன் உற்சவத்தை முன்னிட்டு இராணுவ முகாம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இதேவேளை அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம பௌத்த விகாரையிலும் விசேட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

## புளியந்தீவு கோட்டடி பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை



(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

மட்டக்களப்பு நீதி மன்ற வளாகத்தின் எதிரே நீண்ட காலமாக பூர்த்தியற்றுக் காணப்பட்ட அருள்மிகு ஸ்ரீ கோட்டடிப் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவுற்ற நிலையில், புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தையொட்டிய கர்மாரம்ப கிரியைகள் நாளை (06) ஆரம்பமாகவுள்ளன.

புதன்கிழமை (07) காலை 5.00 மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்துதலும், வியாழக்கிழமை (08) மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகப் பூஜைகள் நடைபெற்று செவ்வாய்க்கிழமை (20) காலை 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ வெ.கு.பரமானந்தக் குருக்கள், சிவஸ்ரீ ஜி.என். திருக்கணேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ஸ்கந்தவரதீஸ்வர குருக்கள், சிவஸ்ரீ க.வடிவேல் குருக்கள், சிவஸ்ரீ கா.யதார்த்தன சர்மா மற்றும் ஆலய பிரமத குரு சிவஸ்ரீ ப.துஷந்த சர்மா ஆகியோர் நிகழ்த்துவர்.

## பொசன் தினத்தை முன்னிட்டு 07 கைதிகள் விடுதலை

(கல்லடி குறூப் நிருபர்)

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் சனிக்கிழமை (03) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 07 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில், பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த தண்டப் பணம் செலுத்தாத ஒரு பெண் கைதி உள்ளிட்ட, 6 ஆண் கைதிகளுமாக 7 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை பூராகவும் உள்ள சிறைகளில் இருந்தும் இவ்வாறாக கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொத்துவிலில் நடைபெற்ற தேசிய சுற்றாடல் தின நிகழ்வு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



பொத்துவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ், தேசிய சுற்றாடல் தின வார நிகழ்வுகள் வெற்றிகரமாக இடம்பெற்றன.

சர்வதேச சுற்றாடல் தின கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சர்வதேச சுற்றாடல் தின விழாவிற்கு சமாந்தரமாக தேசிய சுற்றாடல் வாரம் கடந்த மாதம் 30ஆம் திகதி முதல் இம்மாதம் 05ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், பொத்துவில் 03 கிராம சேவகர் பிரிவில் சிரமதானம், மரநடுகை மற்றும் பொலித்தீன் பாவனைக்கெதிரான விழிப்புணர்வு சுலோகங்களை காட்சிப்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கஞ்சாவுடன் கைதான பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கேரளா கஞ்சா ஒரு கிலோ பத்து கிராமை தம் வசம் வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும், பொலிஸ் அதிகாரியொருவரை இம்மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதவான் சனிக்கிழமை (3) உத்தரவிட்டுள்ளார்.

முள்ளிப்பொத்தானை 10ஆம் கொலனியில் வசித்து வரும் நான்கு பிள்ளைகளின் தந்தையான 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் திருகோணமலையில் அனுராதபுர சந்தியில் இருந்து, முச்சக்கர வண்டியில் கேரளா கஞ்சா பொதியை ஏற்றிக் கொண்டு சென்ற போதே, 96ஆம் கட்டை பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு அருகில் வைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்போபுர பொலிஸ் அதிரடிப் படையினருக்கு பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சந்தேக நபரை கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தம்பலகாமம் பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## ஏறாவூரில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள்

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)



ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த குடும்பமொன்றுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டினை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. மட்டக்களப்பு அஹிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியினால் கனடா நாட்டில் வசிக்கும் ஐயப்பன் பக்தர்களின் குடும்ப உறவுகளின் நிதிப் பங்களிப்பினால் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக அஹிம்சா சமூக நிறுவனத்தின் தவிசாளர் வீ.விஜயராசா தெரிவித்தார். கோறளைப்பற்று தெற்கு (கிரான்), ஏறாவூர்ப் பற்று (செங்கலடி) மற்றும் மண்முனை மேற்கு (வவுணதீவு) ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கின்ற வறிய குடும்பங்களைத் தெரிவுசெய்து வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். இத்திட்டத்தின் பிரகாரம் சகல வசதிகளையும் கொண்ட 63ஆவது வீட்டினை ஏறாவூப் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட கரடியனாறு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஆறுமுகம் ஆனந்தி என்ற பயனாளிக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

## சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்

(மூதூர் தினகரன் நிருபர்)



மூதூர் அக்கரைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்ட முகம்மது இஸ்மாயில் சவாகீர் திருமலை நீதிமன்ற வலய சமாதான நீதவானாக மூதூர் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அக்கரைச்சேனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

## 'மாணவர்களும் எதிர்காலமும்' விழிப்புணர்வு நிகழ்ச்சி

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஏறாவூர் கோட்ட பாடசாலைகளில் க.பொ.த. (உ/த) இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று, ஏறாவூர் குபா சமூக நல ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ஏறாவூர் அல் ஜுப்ரியா வித்தியாலய கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (03) நடைபெற்றது.

சமூக செயற்பாட்டாளர் ஜெளபர் பஷீரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில், வளவாளராக யூ.கே. றமீஸ் கலந்து கொண்டார்.

குபா சமூக நல ஒன்றியத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ஹாமீம் அஸ்ஹரி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஏறாவூர் கோட்ட பாடசாலைகளான அல் முனீறா பாலிகா மகா வித்தியாலயம், றகுமானியா தேசிய பாடசாலை மற்றும் அல் அஸ்ஹர் மகளீர் தேசிய பாடசாலை ஆகியவற்றிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## ஆசுகவி அன்புடீன் ஞாபகார்த்த நிகழ்வு

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)



கிழக்கிலங்கையின் மூத்த இலக்கியவாதி மர்ஹூம் ஆசுகவி அன்புடீனின் ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட 'நிலவிலே நினைவேந்தல்' நிகழ்வு அட்டாளைச்சேனையில் சனிக்கிழமை (03) இடம் பெற்றது.

ஆசுகவி பொன்விழா மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர், சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர் தலைமையில் கடற்கரை விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் யு.எல்.ஏ. அஸீஸ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இங்கு, கல்விமான்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு ஆசுகவி அன்புடீன் ஞாபகார்த்த உரையை நிகழ்த்தினர். கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் பாலமுனைப் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஆசுகவி அன்புடீன், சாமரையில் மொழி கலந்து, முகங்கள் ஐந்து, நெருப்பு வாசல், தொப்புள் கொடியும்தலைப்பாகையும்போன்ற ஆறு இலக்கிய நூல்களை வெளியிட்ட படைப்பாளியாவார்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

108

**நிஸான் கார்** விற்பனைக்கு

WP KI - 8362 Nissan TIIDA, 2008. Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 07112 108 10 033789

118

**ஜீப்புகள், பிக்கப்புகள்** விற்பனைக்கு

CP-PW-7384-FO-TON-BJ10-10V0JA3-2-SINGLE CAB-2013-RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2081033 033808

NC CAP-1493 Nissan X-Trail, 2015 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 07145 429 58 033786

### வேலைவாய்ப்பு

325

**தொழில்துறை** பொது

உடனடி வெற்றிடம் மொழிபெயர்ப்பு அலுவலகம் கணனி தட்டெழுத்தாளர் தேவைப்பாடுகள். சிறந்த தட்டச்சு திறமை ஆங்கில/ சிங்கள மொழிகளில் தேர்ச்சி MS Word Processing Tools களில் அறிவு அடிப்படை கல்வித் தகைமை (க.பொ.த. சா/த அல்லது க.பொ.த. உ/ த ) தகவல்களுக்கு அழையுங்கள். 076 1773004 033348

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பொதி செய்வதற்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு சம்பளம் 50,000/ முதல் 60,000/ வரை. 077 97180 56, 074 00657 70, 074 1705817 033745

தேங்காய் பால் பொருட்கள் நிறுவனத்தின் பெக்கேஜிங் துறைக்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. சம்பளம் 45,000/ 55,000/ உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. 0779718056, 074 0065770, 074 1705817 033749


## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1)இன் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம்.

நிறுவனத்தின் முன்னாள் பெயர் :
**ஈப்பர் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட்**

நிறுவனத்தின் எண் : **PV 00212051**

நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி:
**இல. 274/3, தலங்கம வடக்குத் தலங்கம**

நிறுவனத்தின் புதிய பெயர் :
**EIPER இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட்**

**செனவிரத்ன ரன்ஹோட்டி கமகே ஜகத்**
**நிர்வாக இயக்குநர் & தலைவர்**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **13/06/2023**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **14/06/2023**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **15/06/2023**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.

திகதி : **15/06/2023**
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை 2023 மே 09ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
விசொலிட் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இல :** பீவீ 90827

**பதிவு முகவரி:**
இல. 61, 2வது மாடி, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

**கம்பனியின் புதிய பெயர்:**
அட்வானியா (பிரைவட்) லிமிட்டட்

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி செயலாளர்கள், 03ம் மாடி,
இல 11, காசல் ஒழுங்கை. கொழும்பு 4.

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1)இன் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம்.

நிறுவனத்தின் முன்னாள் பெயர் :
**காட்சு உயர் மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்ப பயிற்சி மையம் (பிரைவேட்) லிமிடெட்**

நிறுவனத்தின் எண் : **PV 66705**

நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி:
**இல. 249/1, மாலபே வீதி, தலங்கம வடக்கு கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

நிறுவனத்தின் புதிய பெயர் :
**KIU CAMPUS (PRIVATE) LIMITED**

**செனவிரத்ன ரன்ஹோட்டி கமகே ஜகத்**
**நிர்வாக இயக்குநர் & தலைவர்**




# கலவான நிவ்வதுராவ பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்கள் பாதிப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

கலவான நிவ்வதுராவ பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

முதலாம் ஆண்டு முதல் கல்வி பொதுத் தராதர சாதாரண தர வகுப்பு வரையுள்ள இப்பாடசாலையில், 90 மாணவ, மாணவிகள் கல்வி கற்கின்றனர்.

12 ஆசிரியர்கள் தேவையாகவுள்ள இப்பாடசாலையில்,09 ஆசிரியர்களே உள்ளனர்.

இவர்களில் ஆறாம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை கல்வி போதிக்க நான்கு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.மேலும்,கணித பாடத்தை போதிக்கும் ஆசிரியை அடுத்த மாதம் ஓய்வு பெற உள்ளதால் நிலைமைகள் இன்னும் பாதிக்கப்படுமென கவலை தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலை அதிபர் பாடசாலையை விட்டுச் சென்ற பிறகு வேறு ஒரு அதிபர் இதுவரை நியமிக்கப்படவில்லை. விவசாயம் கணிதம் ஆங்கிலம் சுகாதாரம் தமிழ் மற்றும் அழகியற் கல்வி ஆகிய பாடங்களை போதிப்பதற்கு ஆசிரியர் எவரும் இல்லை எனவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து, கலவான வலைய கல்வி காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக உரியவர்களுக்கு அறிவித்து, ஆசிரியர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

# யாத்திரை சென்ற பஸ் டிரக்டரில் மோதி பெண் பலி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பொசன் புனித யாத்திரை சென்று கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்று திடீரென டிரக்டர் வண்டியில் மோதி பெண்ணொருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் நடந்த இவ்விபத்தில் டிரக்டர் வண்டியின் சாரதியுட்பட எட்டுப்பேர் காயமடைந்தனர். இவர்கள், இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்விபத்தில், குறித்த பெண் வீதியில் வீசப்பட்டதிலேயே உயிரிழந்தார். டிரக்டர் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைத் தூக்கமே விபத்துக்கு காரணமென விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஓவிலிகந்த பதிங்கொள்ள வீதியில் புதிதாக பஸ் போக்குவரத்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாத்தளை (இ.போ.ச) இச்சேவையை நேற்று ஆரம்பித்தது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க இச்சேவையை ஆரம்பித்து வைத்தார்.
(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# நுளம்பு பரவும் சூழலை துப்புரவு செய்யும் பணிகள்

(மாத்தளை சுழற்சி நிருபர்)



சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வை.எம்.எம்.ஏ நிககொள்ள கிளையின் ஏற்பாட்டில், நிககொள்ள கிராமத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் மற்றும் வீதிகளின் இருமருங்குகளிலும் உள்ள புற்கள் துப்புரவு செய்யப்பட்டன. இவ் வேலைத்திட்டத்திற்கமைய யடவத்த பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட பதிங்கஸ் கொட்டுவநிககொள்ள பிரதான வீதிகள் துப்புரவாக்கப்பட்டன. அத்துடன் டெங்கு பெருகும் பொது இடங்கள்,பசார் வீதிகள் உட்பட இப்பகுதி ரஹ்மானியா தக்கியா பள்ளிவாசலின் சுற்றுச் சூழலிலும் இவ்வாறு துப்புரவு செய்யும் பணிகள் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்றதாக வை.எம்.எம்.ஏ தலைவர் சனீர் தெரிவித்தார்.

# கஞ்சா தோட்டம் சுற்றிவளைப்பு: சந்தேகத்தில் ஒருவர் கைது

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

ஹப்புத்தளைவிஷேட அதிரடிப்படையினருக்குகிடைத்த இரகசிய தகவலையடுத்து, பன்வில அம்பகஸ்தோவை பகுதியில் செய்கை பண்ணப்பட் டிருந்த கஞ்சாத் தோட்டம் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது, இங்கிருந்த கஞ்சா செடிகள் பலவற்றை படையினர் கைப்பற்றினர்.இது குறித்த சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.இவரிடமிருந்து உலர்ந்த கஞ்சா 510 கிராமும் மீட்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகள் மற்றும் உலர்ந்த கஞ்சாவுடன் சந்தேக நபரையும் விஷேட அதிரடிப் படையினர் அம்பகஸ்தோவை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அம்பகஸ்தோவை பொலிஸார் தெரிவித்தனர்.



# கை, கால் கட்டப்பட்டவாறு முதியவரின் சடலம் படுக்கையறையிலிருந்து மீட்பு

வலப்பனை பிரதேசம் மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பி வத்த கலபட விகாரை பகுதியில் பொஸன் தினத்தன்று மாலை, கை,கால் கட்டப்பட்ட நிலையில் வயோதிபரின் சடலமொன்று மீட்கப்பட்டது. வீடொன்றிலிருந்து இச்சடலம் மீட்கப்பட்டதாக மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர். தெகேகெதர வீ.எம். அபேகோன் பண்டார (வயது 73) என்பவரே சடலமாக மீட்க்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். தனது மனைவியுடன் வாழ்ந்து வந்த இவ்வயோதிபரின் மனைவி பொஸன் தினத்தில் கலபட விகாரைக்கு வழிப்பாட்டுக்காக காலை சென்று மாலை வீடு திரும்பினார். இந்நிலையில்,நித்திரை செய்த கட்டிலில் கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கணவன் உயிரிழந்து கிடந்ததை அவதானித்தார். பின்னர் அயலவர்கள் மற்றும் பொலிஸாருக்கு பதற்றத்துடன் மனைவி தகவலை வழங்கினார். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் அயலவர்கள் சடலத்தை மீட்டுள்ளனர். இவ்வயோதிபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் அப்பகுதியில் எழுந்துள்ளது. இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வரும் அதேவேளை, பிரேத பரிசோதணைக்காக ரிகிலகஸ்கடை பொது வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மத்துரட்ட பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஆ.ரமேஸ்)

## அறிவித்தல்

### லங்கா ஹோடேல்ஸ் அன்ட் டிரவல்ஸ் (பிறைவெட்) லிமிடெட்

**நிறுவன பதிவு: இல. PV1855**

2007இன் 7ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 59ஆவது பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைவாக நான்கு மில்லியனே இருநூற்று ஐம்பதாயிரம் (4,250,000) சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா நாற்பத்து இரண்டு மில்லியனே ஐந்நூறாயிரத்தின் (ரூபா 42,500,000) நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் ரூபா ஐந்து மில்லியனின் (ரூபா 5,000,000) கூறப்பட்ட மூலதனம் ஒன்றுக்கு குறைக்கப்பட்டிருப்பதை அதன் பங்குதாரர்களுக்கு பரிந்துரைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதை லங்கா ஹொடேல்ஸ் அன்ட் டிரவல்ஸ் (பிறைவெட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபை இத்தால் அறியத்தருகிறது.

முன்மொழியப்பட்ட கூறப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கு வழிவகுக்கும் பங்குதாரர்களின் தீர்மானத்தை பெறும் நோக்கில் நிறுவனத்தின் அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்று இல. 38, ஸ்டேசன் வீதி, வத்தளை என்ற முகவரியில் 2023 ஓகஸ்ட் 7ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.

**சபையின் ஆணைப்படி**
**கன்சல்டன்ஸ் அன்ட் செக்ரட்டரிஸ் (பிறைவெட்) லிமிடெட்**
**நிறுவன செயலாளர்கள்**

**2023 ஜுன் 1ஆம் திகதி**

## 1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. அம்பகோ/3/7/அ/2/16
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல: 4/3/23/2020/CEB/07

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக்கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2320/86 மற்றும் 2023.02.25 மற்றும் இல. 2329/59 மற்றும் 2023.04.30 திகதி வெளியான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் 111 பகுதியினைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| i. | மாவட்டம் | : நுவரெலியா |
| ii. | பிரதேச செயலகம் | : அம்பகமுவ கோரளை |
| iii. | கிராமம் | : கோர்த்தி |
| iv. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 320- நோர்வூட் |
| v. | காணியின் பெயர் | : கிலண்டில்ட் தோட்டம் |
| vi. | வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் | : ஆ.வ.நு 3517 இன் துண்டிலக்கம் 01 |
| vii. | பரப்பளவு | : ஹெக்டயார் 0.0632 |

**சிதாரா ருவின் கமகே**
**பிரதேச செயலாளர்**
**அம்பகமுவ கோரளை**

**2023.05.30 திகதி**
**பிரதேச செயலகம்**
**அம்பகமுவ கோரளை**

## பெறுகைக் காலத்தை நீடிப்பு செய்தல்

### கமநல அபிவிருத்தித் திணைக்களம்

கமநல அபிவிருத்தி நிர்வாகக் குழுவிற்கு டெஸ்டொப் கணனிகள், டொட் மெட்ரிக்ஸ் POS அச்சுப் பொறிகள் மற்றும் ஸ்கேனர் இயந்திரங்கள் மற்றும் கமத்தொழில் வங்கிகளுக்கு டொட் மெட்ரிக்ஸ் இயந்திரங்கள் டொட் மெட்ரிக்ஸ் அச்சுப் பொறிகள் (பாஸ் புத்தகங்களிற்காக) மற்றும் ஸ்கேனர் இயந்திரங்களை வழங்கி நிறுவி நடைமுறைப்படுத்துதல்.

மேற்படி தலைப்பில் 2023.05.22 அன்று பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

1. அதன் பிரகாரம் மேற்படி பெறுகைக்கான விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளும் காலம் 2023.06.19 வரை நீடிப்பதற்கும்.
2. விலைமனு அட்டவணையை பின்வருமாறு திருத்துவதற்கும், திணைக்களப் பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**விலைமனு அட்டவணை (திருத்தப்பட்டது)**

| பெறுகை இலக்கம் | விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா |
|---|---|---|
| DAD/FIN/PRO/5/ Com.Equi/2023 | • டெஸ்டொப் கணனிகள் 67<br>• டொட் மெட்ரிக்ஸ் POS அச்சுப் பொறிகள் 565<br>• ஸ்கேனர் பொறிகள் 565<br>(நாட்டின் கமநலசேவை நிர்வாக சபைகளுக்கு) | 20,000.00 |
| DAD/FIN/ PRO/5Printers & scanners/2023 | • டொட் மெட்ரிக்ஸ் அச்சுப் பொறிகள் 565<br>• டொட் மெட்ரிக்ஸ் அச்சுப் பொறிகள் (பாஸ் புத்தகங்களிற்காக) 559<br>(நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கமநல வங்கிகளுக்காக) | 35,000.00 |

- இப் பெறுகைக்கான ஏனைய விடயங்கள் தொடர்ந்தும் மாற்றமின்றி அமைந்திருக்கும் என அறிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**கொழும்பு 07.**
**0112674480**

**2023.06.05**

## பெறுகை அறிவித்தல்

### கழிவுப் பொருள் அகற்றும் உறைகளை கொள்வனவு செய்தல் - 2023

### டி சொய்சா மகளிர் மருத்துவமனை - கொழும்பு - 08

டி சொய்சா மகளிர் மருத்துவமனையில் 2023ஆம் ஆண்டிற்காக கழிவுப் பொருள் அகற்றும் உறைகளைக் கொள்வனவு செய்வதற்காக இல. 2034/35 எனும் 2017.09.01ம் திகதிய அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அவ் விலைமனுக்கள் எம்மால் வழங்கப்படும் ஆவணத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.06.05 முதல் 2023.06.20 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையை வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை நிதிப் பிரிவிற்கு சமர்ப்பித்து விலைமனுக்கள் வழங்குவதற்கு தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் 2023.06.21 மு.ப. 10.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கழிவுப் பொருள் அகற்றும் உறைகளை கொள்வனவு செய்தல் 2023 என்று குறிப்பிடுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2023.06.21 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தை அழையுங்கள் (தொ.பே.இல. 011-2697315/ 2696224-25) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**டி சொய்சா மகளிர் மருத்துவமனை கொழும்பு- 08**

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

## குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு தொகுப்பு விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் முழு உரித்தானதும் துணைநிறுவனமான இலங்கை சேமிப்பு வங்கியின் குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொகுப்பை விற்பனை செய்வதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். உயர்தர குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொகுப்பை கையேற்பதில் ஆர்வமுள்ள சாரார்களுக்கு அவர்களின் சுறுசுறுப்பான நிதியிடல் சேவைகள் தொழில்துறையை விஸ்தரிப்பதற்கான தனித்துவமான சந்தர்ப்பமொன்றாகும்.

இத் தொகுப்பு வாகனங்களை மாத்திரம் அடங்கியுள்ளது.

ஆர்வத்தை வெளிப்படுத்தல் எப்படி?

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொகுப்பை கையேற்பதில் உங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கும் மேலதிக தகவலுக்குமாக தயவு செய்து பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**திரு. சுஜித் பெர்ணாண்டோ**
தொடர்பிலக்கம் - 0701357955 மின்னஞ்சல் - **sujithf@slsbl.lk**

**திரு. எரன்ஜித் பத்மகுமார**
தொடர்பிலக்கம் - 0718558217 மின்னஞ்சல் - **eranjith@slsbl.lk**

ஆர்வமுள்ள சாரார் மேலதிக தகவலை 2023 ஜூன் 12 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெற்றுக் கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். உங்கள் விசாரணைகளை பெற்றுக் கொண்டு இந்த வியப்புக்குரிய சந்தர்ப்பத்தை மேலும் விஸ்தரிப்பதற்காக நாம் எதிர்பார்க்கின்றோம்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி**
**இல.: 265, வோட் பிளேஸ், கொழும்பு-07.**
**தொலைபேசி : 0112-674700-3**
**தொலைநகல் : 0112-674706**
**மின்னஞ்சல் : info@slsbl.lk**

## 1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. அம்பகோ/3/7/அ/2/15
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல: 4-3/17/2019/LO/243

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப் பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக்கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2320/86 மற்றும் 2023.02.25 மற்றும் இல. 2329/59 மற்றும் 2023.04.30 திகதி வெளியான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் 111 பகுதியினைப் பார்க்கவும்.

**அட்டவணை**

i. மாவட்டம் : நுவரெலியா
ii. பிரதேச செயலகம் : அம்பகமுவ கோரளை
iii. கிராமம் : நோர்வூட்
iv. கிராம உத்தியோகத்தர் பிரிவு : 320- நோர்வூட்
v. காணியின் பெயர் : நோர்வூட் தோட்டம்
vi. வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் : ஆ.வ.நு 3497 இன் துண்டிலக்கம் 01, 02 மற்றும் 03
vii. பரப்பளவு : ஹெக்டயார் 0.2157

**சிதாரா ருவின் கமகே**
**பிரதேச செயலாளர்**
**அம்பகமுவ கோரளை**

**2023.05.30 திகதி**
**பிரதேச செயலகம்**
**அம்பகமுவ கோரளை**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## நீர்கொழும்பு மாநகர சபை

நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்திற்கு பஸ் வண்டிகள் நுழைவுக் கட்டணம் அறவிடுதலை 2023-07-01ஆம் திகதி முதல் 2024-06-30ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக இரு பிரதிகளுடனான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | குத்தகை | ஆகக் குறைந்த தொகை ரூபா | வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்திற்கு பஸ் வண்டிகள் நுழைவுக் கட்டணம் அறவிடுதல் (ஒரு பஸ் வண்டிக்கு 100.00 ரூபா வீதம்) | ரூபா 750,000.00 | ரூபா 100,000.00 | ரூபா 3,000.00 |

***கேள்விப் படிவ விநியோகம்*** - 2023-06-05ஆம் திகதி மு.ப. 9.00 முதல் 2023-06-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில்

***கேள்விப் படிவங்கள் ஏற்பதை நிறைவு செய்தல்*** - 2023-06-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அந்நேரத்தின் பின்னர் சமர்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

***கேள்விப் படிவங்களைத் திறத்தல்*** - 2023-06-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

1. இந்தக் குத்தகை 2023-07-01ஆம் திகதி முதல் 2024-06-30ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு மட்டும் குத்தகைக்கு வழங்கப்படும்.
2. மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின்னரே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். விண்ணப்பத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. இந்த குத்தகை வழங்கலுக்கு இயைபாக ஆகக்குறைந்த மாதாந்த கட்டணம் 750,000.00 ரூபா என்பதுடன் வெற்றிகரமான விலைமனுதாரரினால் 03 மாதக் கட்டணத்தை வைப்புத் தொகையாக சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.
4. நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்திற்கு பஸ் வண்டி நுழைவுக் கட்டணமாக ஒரு வண்டிக்கு 100.00 ரூபா வீதம் அறவிடுதல் வேண்டும்.

உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது மாதிரிப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்திற்கு பஸ் வண்டிகள் நுழைவுக் கட்டணம் அறவிடுதல்'' எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களை கணக்காளரிடம் (031-2222275) அறிந்துகொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அனுமதி வழங்கப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.

இந்த கேள்வி கோரல் தொடர்பில் மாநகர ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**2023-05-31ஆம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

# பெறுகை அறிவித்தல்

## மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல்

## கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி | அளவு | பூர்த்தி செய்து இருக்க வேண்டிய தகைமைகள் | கேள்விப் பிணை முறி ரூ. | கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01. Audiometer | 01 | CDDA/ NMRA பதிவுச் சான்றிதழ் | 22500.00 | 2500.00 |

02. தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் வழங்குநர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகமையுடைய எந்தக் கேள்விதாரருக்கும், பிரதிநிதியொருவருக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் ஒருவருக்கு கீழ்க்காணும் விடயங்களைச் சமர்ப்பித்து 2023.06.05 முதல் 2023.06.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கொழும்பு வடக்கு போதனா வைத்தியாசலையின் பிரதம கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பம்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்று

04. 2023.06.27 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு வடக்கு போதனா வைத்தியாசலையின் பிரதேச பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

05. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் 'மூலப் பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பெறுகையின் பெயர் மற்றும் திறக்கப்படும் தினத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
(தொலைபேசி இல. 011-2959261/2 நீடிப்பு -173)

**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**ராகம.**

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை - குருநாகல்

இந்த வைத்தியசாலையின் பின்வரும் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளைச் செய்வதற்கு ICTAD/CIDA செல்லுபடியாகும் அங்கத்துவத்தைக் கொண்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023-06-26ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விகள் கோரப்படுகின்றன என்பதுடன் கேள்விகள் அன்றைய தினமே பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

2023-06-23ஆம் திகதி பி.ப. 3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் அந்நேரம் வரை பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பம்
2. ஒவ்வொரு வேலைக்காகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வைத்தியசாலை காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
3. ICTAD/CIDA பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
4. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கம்பனி பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் (கேள்வி ஆவணங்களை வழங்குவதற்காக மட்டும் சான்றிதழுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்)

கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு உங்களது கேள்விப் படிவங்களை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமைக் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். இது தொடர்பிலான மேலதிக விபரங்கள் தேவைப்படின் 037-2233906 எனும் தொலைபேசி இலக்கத்தில் 2800 எனும் இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விடயம் | மதிப்பீட்டுப் பெறுமதி | தரம் | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா சதம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| 01. | மருந்து களஞ்சியசாலையின் தரை தளத்திற்கு நிறப்பூச்சு பூசுதல் மற்றும் மின்சார வேலைகளைச் செய்தல் | 5.5 மில்லியன் ரூபா | C6, C7 | 55,100.00 | 2,500.00 |
| 02. | சத்திரசிகிச்சை கட்டிடத்தில் தரை தளத்தை நிர்மாணித்தல் | 24.9 மில்லியன் ரூபா | C5, C6 | 250,000.00 | 4,000.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

# INVITATION FOR BIDS 2023/01

## DEPARTMENT OF INDUSTRIES (NP) JAFFNA

1. The **Chairman, Department Procurement Committee,** on behalf of the Provincial Director, Provincial Department of Industries, NP now invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding procedure (NCB).**

   *"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" and Public Finance Circulars No. 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working day from 09:00 hrs to 15:00 hrs.
6. A complete set of Bidding Documents in English Language may be purchased by interested bidders on submission of a written application to the **Provincial Director, Department of Industries, NP, Adappan Road, Main Street, Jaffna. (T.P. 021-2229717, Fax : 0212231532) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 2023.06.05 to 2023.06.26 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Department of Industries NP, Adappan Road, Main Street, Jaffna at or before 10.30 a.m. on 2023.06.27.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Department of Industries, NP, Adappana Road, Main Street, Jaffna commencing at 2.30 p.m. on 2023.06.14.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| | Document Issuing/Purchasing Period | | | | From 2023-06-05 until 2023-06-26 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 2.30 P.M on 2023-06-14 | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 2023-06-27 | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Con-tract Period | Grade Required | Non Refundable Fees (Rs.) | Required Bid Security | |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period |
| PSDG/NP/B/I/JA/01/2023 | Construction of Office Building for Department of Industries at Jaffna (Ground Floor Completion) | 25.22 | 120 Days | C6 or C5 or C4 (Buildings) | 10,000.00 | 253,000.00 | Till 23.10.2023 |

**Chairman**
**Department Procurement Committee**
**Department of Industries (NP),**
**Adappan Road, Main Street,**
**Jaffna.**

Wherever you are... Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
for 15 Words - Rs.1,000/-
The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
Easy way to make your payment :- BOC - Acc.No. 00000377
Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

சுகாதார அமைச்சு, சுதேச வைத்திய பிரிவு

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

# விலை ஒப்பீட்டு முறைமையின் கீழாக இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024ஆம் வருடம்

கீழே காணப்படும் மூலப்பொருள் வகைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ வழங்க முடியுமான நபர்கள் அல்லது நிறுவனங்கள் எமது கூட்டுத்தாபனத்தில் வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2023-06-05ஆம் திகதி முதல் 2023-06-27ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கிராம மட்டத்திலுள்ள மருந்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், மருந்தை சேகரித்து வழங்குபவர்கள், மருந்து விவசாய அமைப்புகள், அரச நிறுவனங்கள் மற்றும் மருந்து விவசாய சங்கங்களும் பதிவு செய்யப்படவுள்ளன.

**01. கொள்வனவு செய்யப்படும் மூலப்பொருட்கள் வகை/பொருட்கள்/ சேவைகள்/ வேலைகள்**

**i. உலர்ந்த மூலப்பொருட்கள் (உள்ளூர்)**

i. உதாரணம்: கடுக்காய், அத்தன மற்றும் அசோக பட்டை, விளைச்சல் மற்றும் வேர்கள், எலபட்டு, புளு, பொல்பலா, வில்வம் வேர், ஏஹல பட்டை போன்ற மூலப் பொருட்கள் அண்ணளவாக 150 வகைகள் அளவில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ வழங்க முடியுமாக இருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தால் எதிர்பார்க்கப்படும் தரத்திற்கேற்ப நன்றாக உலர வைத்து அவற்றை வழங்கல் வேண்டும். (5% - 10% வரையான ஈரப்பதன் மட்டுமே இருத்தல் வேண்டும்)

**ii. உலர்ந்த மூலப்பொருட்கள் (இறக்குமதி செய்யப்பட்டவை)**

i. பத்பாடகம், ஓமம், கரோல்அரிசி, கந்தகம், அமுக்கரா கிழங்கு, குகுல், களுதுரு, கட்பல பட்டை, மருத்துவ முந்திரிப்பழம், பீணகரோசண ஆகியன அண்ணளவாக 70 வகைக்கும் மேற்பட்ட மூலப்பொருட்கள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கும் தரத்திற்கு உங்களுக்கு வழங்க முடியும்.

**iii. பச்சையாகப் பெற்றுக்கொள்ளப்படும் மூலப்பொருட்கள்**

i. ஆடாதோடை இலை, பட்டை, ஆடாதோடை வேர், ஆடாதோடை மற்றும் வேர், சாம்பல் வாழைக்காய் கிழங்கு, எம்புல் எம்புளிய மற்றும் வேர், புளித்தோடை, அங்கெந்த இலை பட்டை, அத்தன இலை, அத்தன வேர், எலபட்டு காய், யக்வனஸ்ஸ, எலஒலிந்த, எரபுது இலை, பட்டை, அரச மரத்தின் பட்டை, வெற்றிலை, தெமட்ட காய், மாதுளம் பழம், விளாம் பழ பட்டை, திய ஹபரல, மிளகு வேர், கஸ்பெலை காய், கிரிநில்ல இலை, கொடி வல்லாரை, ஹம்பில்ல, ஹாதாவாரி கிழங்கு உட்பட உள்ளூரில் விளையும் அதிகளவான மூலப் பொருள் வகைகள் இத்தொகுதிக்குள் உள்ளடங்கும். இத்தொகுதியின் கீழ் மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, மூலப் பொருட்கள் தனித்தனியே கொள்வனவு செய்யப்படமாட்டாது. உங்களால் ஒரு மருத்துவப் பட்டியலிற்காக (வேலைப்பத்திரம்) தேவைப்படும் அனைத்து மூலப்பொருட்களையும் வழங்க வேண்டும்.

ii. உதாரணமாக நீலயாதி தைலத்தைத் தயாரிப்பதற்காகத் தேவைப்படும் அங்கெந்த இலை மற்றும் பட்டை, மதடிய இலை மற்றும் பட்டை, கொடி கெப்படியா இலை மற்றும் பட்டை, தியபரல, நில்அவரிய இலை என்பன தேவையான அளவு ஒரு வழங்குநரால் வழங்கப்படுதல் வேண்டும்.

iii. இவ்வாறான 30 வேலைப் பத்திரங்கள் உள்ளதுடன், இஞ்சி, பச்சை மஞ்சள், எலுமிச்சை, ஹாதாவாரி கிழங்கு, சாம்பல் பூசணி, தேங்காய், கித்துள் கருப்பட்டி என்பனவற்றை தனித்தனியாக வழங்கலாம்.

iv. பச்சை இலை, பட்டை, வேர் வகைகள் என்பவற்றை வழங்கும் போது அவை உயிருள்ள தாவரங்களிலிருந்து பெறப்பட்டு 03 தினங்களுக்குள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

iv. வாசனைத் திரவியங்கள்
கிராம்பு, கொரக்கா, வெந்தயம், மிளகு, கொத்தமல்லி, வெள்ளைப்பூடு, சாதிக்காய், ஏலம், வஸாவாசி, பெருஞ்சீரகம், நற்சீரகம் என்பவை ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கு இயைபான குணாம்சங்களை கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

v. எண்ணெய் மற்றும் திரவ வகைகள்
கடுகு எண்ணெய், நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், வெள்ளை தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், டர்பன்டைன், தேன் மற்றும் ஏனைய எண்ணெய் மற்றும் திரவ வகைகள் இயைபுடைய எண்ணெய் மற்றும் திரவ வகைகள் இலங்கை தரக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தரத்திற்கு அமைவாக இருக்க வேண்டும் என்பதுடன் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருத்துவச் சபை மற்றும் ஆய்வுகூடத்தின் பரிசீலனை மூலமாக வழங்கப்படும் எண்ணெய் மற்றும் திரவ வகைகளின் தரம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

vi. கண்ணாடி போத்தல்கள் (உபயோகிக்கப்படாதது)
உணவு மற்றும் மருந்து வகைகளை பொதி செய்வதற்கு பொருத்தமான சர்வதேச தரங்களுக்கமைவான உபயோகிக்கப்படாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள போத்தல் வகைகள்.
1. 1 அவுன்சு முதல் 750 மில்லி லீற்றர் வரையிலான வெள்ளை நிறமான போத்தல்கள்
2. 200/250/400/450 கிராம் வரையிலான வெள்ளை நிறமான ஜேம் போத்தல்கள்
3. 100/200/500 மில்லி லீற்றர் வரையிலான கபில நிறமான போத்தல்கள்

vii. போத்தல் மூடி (அலுமினியம்)
அச்சிடப்பட்ட/ அச்சிடப்படாத கீழுள்ள அளவுகளிலான அலுமினியம் மூடிகள்.
31.5 மி.மீ/ 28 மி.மீ./ 25 மி.மீ./ 22 மி.மீ.

viii. அச்சிடப்பட்ட/ அச்சிடப்படாத நெளிவுடைய அட்டைப் பெட்டிகள் (கொருகேடற்/ Corrugated Boxes)

ix. பொலித்தீன், அச்சிடப்பட்ட பொதிகள், செலோ பேன், அச்சிடப்பட்ட பொலித்தீன் பேக், கிறின்க் கெப், அலுபொயில், அலுமினியம் பொயில், டீ பேக் (Tea Bag) Bopp Cut Sheet
கவனிக்கவும்: (மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2017-09-05ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பாவனைக்கு உகந்த பொலித்தீனாகவிருத்தல் வேண்டும்)

x. Maisa Envelope அச்சிடல் ( Tea bag, Tea Envelop Printing, Customer Tea Bag Printing)

xi. கணனி/ கணனி துணையுறுப்புக்கள்/ வலையமைப்பு உபகரணங்கள்/ மை / டோனர் / ரிபன் / கார்ட்ரிச் / அச்சு இயந்திரம்

xii. காகிதாதிகள் (பேனைகள்/ பென்சில்கள் / ஸ்டெப்ளர் / கடித உறைகள்/ புகைப்படப் பிரதி தாள்கள் / வேறும் எந்தவொரு வகையான அலுவலக காகிதாதிகள்)

xiii. மின்சாரப் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்கல் (வயர், ஸ்விட்ச், சொக்கட், பல்ப் போன்றவை)

xiv. வளிச்சீராக்கி இயந்திரங்கள் / திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்.

xv. கட்டிடப் பொருட்கள் (கல், மணல், சீமெந்து, உருக்குக் கம்பி, GI Pipe, GI Box, Metal L-Bar, Iron Mesh, Aluminium/ Aluminium Partition /Curtains நிறப்பூச்சு ஆகியன)

xvi. கட்டிட நிர்மாணம், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு (சிறிய மற்றும் நடுத்தர அளவுடையது) அலுமினிய உருப்படிகள் (நிர்மாணம், நவீனமயப்படுத்துதல் மற்றும் உள்ளக பகுதி பிரிப்புகள் மற்றும் வேறு எந்தவொரு வகையிலான கட்டிட நிர்மாணப் பொருட்கள்)

xvii. அலுவலக உபகரணங்கள் (பலகை, இரும்பு, பிளாஸ்டிக், MDF, மெலமைன் போன்றவற்றால் தயாரிக்கப்பட்டுள்ள அலுவலக மேசை, கதிரை, இராக்கை, கபர்ட் போன்ற எந்தவொரு வகையான தளபாடங்களும்)

xviii. வாகன உதிரிப்பாகங்கள், திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்

xix. உற்பத்தியக இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்

xx. உற்பத்தியக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள்

xxi. வார்ப்பு / உருக்கியொட்டுதல் மற்றும் கடைசல் இயந்திர வேலைகள் (இரும்பு / வெள்ளியிரும்பு, MIG Welding, TIG Welding, GAS Welding, SPOT Welding, Electric Welding போன்றன)

xxii. இரசாயனப் பொருட்கள்
பேஷ்வொஷ்/ பொடி வொஷ்/ ஷெம்பூ/ ஹார்பல்வைன்/ ஹர்பல் ட்ரிங்க் என்பனவற்றுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள்

xxiii. ஆய்வுகூட உபகரணங்கள் (Erlenmeyer Flask/Buret/Beaker/Florence Flask/Funnel/Test tubes/Clamps/வேறு எந்தவொரு வகையான இரசாயானம் சார்ந்த பொருட்கள்)

xxiv. பிளாஸ்டிக் போத்தல்கள்/ பிளாஸ்டிக் போத்தல் மூடிகள்
கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்படும் மருந்துப் பொருட்களை பொதி செய்வதற்காக பொருத்தமான சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரமொன்றாக இருத்தல் வேண்டும். (Food Grade)

xxv. அச்சு வேலைகள் (லேபல்/ ஸ்டிக்கர்/ பொதியிடும் பெட்டிகள் / கையேடுகள் / சுவரொட்டிகள் / பதாகைகள் / பெயர்ப்பலகை/ கடித உறைகள் / கோப்பு உறைகள் போன்றவை)
(இதன் பொருட்டு அச்சக உரிமையாளர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்)

xxvi. பாதுகாப்பு உபகரணங்கள் (Construction/Welding/Electrical/Workshop/Lab/கையுறைகள்/முகக் கவசங்கள் / சகல வகையான சப்பாத்துகள்)

xxvii. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (தும்புத்தடி. ஈர்க்கிள்/ தூரிகைகள்/ கால்துடைப்பம்/ சவர்க்காரம்/ சுத்திகரிப்புத் திரவங்கள்….)

xxviii. விவசாய உபகரணங்கள் (வீல்பரோ/மண்வெட்டி/முள்ளு/ இறப்பர் குழாய்கள் /Sekator / Alkathene pipe/ உர வகைள் / நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்கள் / மற்றும் எந்தவொரு வகையான விவசாயப் பொருட்களும்)

xxix. தேயிலை / பால்மா

xxx. சீருடைகள் வழங்குதல் (உடைகள் தைத்தல்/ சீருடைத் துணி வகைகள் வழங்குதல்)

xxxi. சேதப்படுத்தும் உயிரினங்களை கட்டுப்படுத்தும் சேவைகள் (நுளம்பு/ கரையான் / மூட்டைப்பூச்சி/ இழையான் / எலி/ கரப்பான் பூச்சி போன்ற சேதப்படுத்தும் உயிரினங்கள்ளை கட்டுப்படுத்துதல்)

xxxii. துப்புரவேற்பாட்டு வேலைகள் தொடர்பான சேவைகள் வழங்குதல் (அலுவலக சுத்திகரிப்பு / மலசலகூடங்கள் / அலுவலக சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல் மற்றும் வேறு எந்த வகையான சுத்திகரிப்பு வேலைகள்)

xxxiii. பாதுகாப்பு சேவைகள் வழங்குதல்

**02. விண்ணப்பிக்க வேண்டிய முறை:** மாதிரிப் விண்ணப்பப் படிவங்களை www.sladc.lk, www.ayurveda.gov.lk மற்றும் www.health.gov.lk எனும் இணைய தளங்களிலிருந்தும் மற்றும் https://www.facebook.com/ayurvediccorp/ முகநூல் பக்கத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதுடன் அல்லது அந்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அல்லது நாவின்ன, தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'தலைவர், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

**விசேடம்:**

2024ஆம் வருடத்தின் பொருட்டு நீங்கள் / உங்களது நிறுவனம் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்து கொள்வதானால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு அதாவது 2023-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கூட்டுத்தாபனத்திற்குக் கொண்டு வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்படும். தபால் சேவைகளில் ஏற்படும் தாமதம் காரணமாக உங்களின் / உங்களது நிறுவனத்தின் விண்ணப்பப் படிவங்கள் தாமதமாகக் கிடைக்கும் என்பதுடன் அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (2023-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள்) தபாலில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு உங்களது விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு முன் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024'' எனவும் மற்றும் விண்ணப்பிக்கும் பொருள், சேவை மற்றும் வேலை வகுதி என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**03. பதிவுக்கான கட்டணம்:** ஒரு வழங்கல் வகுதிக்கான பதிவுக் கட்டணம் 1000.00 ரூபாவாகும் உதா: உலர்ந்த மருந்திற்கான பதிவு 1000.00 ரூபாவாகும். எண்ணெய் வகைகளுக்கான பதிவு 1000.00 ரூபாவாகும் (அவ்வாறான 3 வகைகளுக்கான பதிவுக் கட்டணம் 3000.00 ரூபாவாகும்.)

இதன் பொருட்டு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் காசுக் கட்டளையொன்றை அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை செலுத்தும் அலுவலகம் மஹரகம தபால் நிலையமெனக் குறிப்பிடுதல் வேண்டும். இதற்குப் புறம்பாக கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம். அரச நிறுவனங்களுக்கு பதிவுக் கட்டணம் விலக்களிப்புச் செய்யப்படும். விண்ணப்பத்துடன் வங்கிப் பிணை/ காசுக் கட்டளை/ காசாளருக்கு பணம் செலுத்தப்பபட்ட பற்றுச்சீட்டையும் இணைத்தனுப்புதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (பதிவு செய்யப்படுவதற்காக செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது)

**04. வழங்குநர்களைப் பதிவு செய்தல்**: உரிய தினத்தில் கிடைக்கப்பெறும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுக்கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்த்து, அவற்றில் தகுதியானவைகள் 2024ஆம் வருடத்தின் பொருட்டு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் வழங்குநர்களாக பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறு பதிவு செய்யப்படும் வழங்குநர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிப்புச் செய்யப்படும்.

**இவ் அறிவித்தல் கீழ்க்காணும் இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.**

- இணையத்தளம் - www.sladc.lk - இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்
- கூட்டுத்தாபன முகநூல்: https://www.facebook.com/ayurvediccorp/
- இணையத்தளம் - www.health.gov.lk - சுகாதார அமைச்சு
- இணையத்தளம் - www.ayurveda.gov.lk - ஆயுர்வேதத் திணைக்களம்

**மேலதிக விபரங்களுக்காக அழைக்கவும்:**

- பொது தொலைபேசி - 011-2850229
- வழங்கல் முகாமையாளர் - 011-2840162
- இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில்
- மின்னஞ்சல் - ayurvedicdrugs@sltnet.lk / chairmanayurveda@gmail.com/ itsladc@gmail.com
- தொலைநகல் - 011-2844357

**கலாநிதி அனுர அதுலத்முதலி,**
**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வணிக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

**தம்போர வீடுகளுக்குப் பிரவேசிக்கும் வீதி, வகவத்த இல. 08 தோட்டப் பாதை, பென்றின்வத்த தோட்டப் பாதை, மினுவங் கொடை பஸ் தரிப்பிடக்கட்டிடங்களுக்கு ரெடிமிக்ஸ் கொங்கிறீட் (G25/20/120mm) வழங்கல்**

**பெறுகை இலக்கம்: PRDA/WP/PRO/2023/35**

இவ் அதிகார சபையின் மேற்படி செயற்றிட்டத்திற்காக ரெடிமிக்ஸ் (G 25/20/120mm)ஐ கொள்வனவு செய்து கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விலைமனு அட்டவணை**

| உருப்படி | அளவு (கியுபிக் மீற்றர்) | விலைமனுப்படிவக் கட்டணம் (பதிவு வழங்குநர்கள் தவிர்ந்த) | பிணையம் காசாக ரூபா | வங்கிப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. தம்போரவத்த வீடுகளிற்கு செல்லும் வீதி | 157.15 | 2000.00 + 15% VAT | 50,500.00 | 101,000.00 |
| 2. வகவத்த இல 8 தோட்ட வீதி | 69.38 | | | |
| 3. பென்றின்வத்தை தோட்ட வீதி | 58.43 | | | |
| 4. மினுவங்கொடை பஸ் தரிப்பிடம் | 43.00 | | | |

02. 2023.06.05 முதல் 2023.06.19 வரை மு.ப. 09.00 முதல் பி.ப. 02.30 வரை பிரதான அலுவலக பெறுகைப் பிரிவில் இதற்கான விலைமனுப்படிவத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. இதற்கான விலைமனுப் பிணையமானது, காசாக அல்லது வங்கி/ காப்புறுதிக்காப்பீடு மூலம், பெறுகைப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மேற்படி பெறுமானத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பெறுகையைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விலைமனுத் தொகையானது ரூபா 5.0 மில்லியன் இற்கு மேற்படும் வேளையில் விலைமனுதாரர் குறித்த 1987 இலக்கம் 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2023.06.20 அன்று மு.ப. 11.00 மணி என்பதுடன் விலைமனுத்திறத்தல் அதே நேரத்தில் இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும்.

06. அவ்வேளையில் வழங்குநர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற முகவரொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12**
**011-4549825/ 011-4849845**

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கும் வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2023**

கொழும்பு - 07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு 01 முதல் 12 வரையான பின்வரும் வகுதிகளின் கீழ் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. அரிசி வகைகள்
2. தானிய வகைகள்
3. பலசரக்குப் பொருட்கள்
4. குரோசரிப் பொருட்கள் - (உணவுப் பொருட்கள்)
5. குரோசரிப் பொருட்கள் - (உணவுப் பொருட்கள் அல்லாதவை)
6. யோகட் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள்
7. கருவாடு
8. இறைச்சி வகைகள் மற்றும் முட்டைகள் மற்றும் மீன்கள்
9. மரக்கறிகள்
10. பழவகைகள்
11. பேக்கரி உற்பத்திகள்
12. எரிவாயு - லிட்ரோ

02) இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுவதற்கான வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர்கள் பட்டியல்படுத்தப்படாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உணவுப் பொருள் உற்பத்தி / வழங்குதல் தொடர்பில் வியாபாரப் பதிவு மற்றும் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்கள் வழங்குதல் தொடர்பில் இரண்டு (02) வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவையை வழங்கியமையை உறுதி செய்வதற்கான ஆவணங்களின் பிரதிகளை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கட்டளை வழங்கப்பட்டு 12 மணித்தியாலங்களுக்குள் உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்களை கொழும்பு 07, பதனம் மாவத்தை, ரீட் அவன்யூ விடுதிகளின் சமையலறைக்குக் கொண்டு வந்து வழங்கக்கூடிய இயலுமை கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும்.

03) விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட அனைத்து பொருட்களையும் அல்லது தெரிவு செய்யப்பட்ட வகுதியொன்றுக்காக மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வகுதி மற்றும் வகுதிகளில் உள்ளடங்கியுள்ள சகல பொருட்களுக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் 2023-06-05ஆம் திகதி முதல் 2023-06-26ஆம் திகதி வரையான (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) அலுவலக நாட்களில் இயைபுடைய பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 0112694566 அல்லது 0112677960 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிகத் தகவல்களைப் விசாரித்தறியலாம்.

05) சகல விலைமனுதாரர்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுப் காப்பொன்றை (பிணை முறியொன்றை) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்கள் விலைக்கோரல் பிணை முறிகளைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை) இந்தப் பிணை முறி 2023-10-26ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

06) ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட 10% சந்தை விலை அதிகரிக்கும் வேளையில் அல்லது குறையும் வேளையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பேரில் பெறுகைக் குழுவின் அனுமதியின் பிரகாரம் மூன்று (03) மாதங்களுக்கு ஒரு முறை விலைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றுக்கு வரலாம். (Central Bank Daily Price index, Department of Censes and Statistic Daily Price index, Colombo Consumer Price index, Peliyagoda Fish Market & Peliyagoda Maning Market Prices, Super market prices)

07) சந்தை விலை ஏற்ற இறக்கத்திற்கு அமைவாகச் சமர்ப்பிக்கப்படும் சகல விலைகளும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (மேற்கூறப்பட்ட 06ஆம் இலக்கத்தின் பிரகாரம் விலைமனுக்கள் திருத்தப்பட்டால் அது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்)

08) உரிய மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ''மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி'' என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விலைமனுக்களை 2023-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் '' DSD/P3/ Suppliers for Hostel & Other .2023'' மற்றும் ''விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கும் வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

- பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை ''பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு - 07'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக்கான பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

09) விலைமனுக்கள் 2023-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

| ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | விலைமனுப் பிணை (முறி) | |
|---|---|---|---|
| DSD/P3/ Suppliers for Hostel & Other. 2023 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2023 | 1. அரிசி | - ரூபா 77,000.00 |
| | | 2. தானிய வகைகள் | - ரூபா 44,000.00 |
| | | 3. பலசரக்குப் பொருட்கள் | - ரூபா 28,000.00 |
| | | 4. குரோசரிப் பொருட்கள் (உணவுப் பொருட்கள்) | - ரூபா 255,000.00 |
| | | 5. குரோசரிப் பொருட்கள் (உணவு பொருட்கள் அல்லாதவை) | - ரூபா 45,000.00 |
| | | 6. யோகட் மற்றும் பால் உற்பத்திகள் | - ரூபா 128,000.00 |
| | | 7. இறைச்சி மற்றும் முட்டை, மீன் | - ரூபா 443,000.00 |
| | | 8. கருவாடு வகைகள் | - ரூபா 9,000.00 |
| | | 9. மரக்கறி | - ரூபா 94,000.00 |
| | | 10. பழவகைகள் | - ரூபா 150,000.00 |
| | | 11. பேக்கரி உற்பத்திகள் | - ரூபா 131,000.00 |
| | | 12. எரிவாயு - லிட்ரோ 37.5 கி.கிராம். | - ரூபா 23,000.00 |

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு - 07.**
**தொலைபேசி : 0112-697934**
**தொலைநகல் : 0112-695822**

## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

**கீழ்க்காணும் பதவிகளுக்காக 2023.06.22 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்**

### நூலகம் – விஞ்ஞான நூலகம்

01. உதவி நூலகர்/சிரேஷ்ட உதவி நூலகர் Gr.I/Gr.II விஞ்ஞான பாட நூலகர் சேவைக்காக இந்த வெற்றிடம் காணப்படுவதால் விஞ்ஞான பாடத்தில் விசேடத்துவத்தை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பள அளவு**

U AC3(iv) : உதவி நூலகர்
ரூ.54,600-10x1335-67,590 மாதாந்தம்

U AC3(ii) : சிரேஷ்ட உதவி நூலகர் தரம் II
ரூ.79,360-11x1630-97,290 மாதாந்தம்

U AC3(i) : சிரேஷ்ட உதவி நூலகர் தரம் I
ரூ.91,310-7x2170-106,500 மாதாந்தம்

(சம்பளத்திற்கு மேலதிகமாக பதவி A 115% பதவி B 131% இற்கு ஓர் கல்வி கொடுப்பனவு மற்றும் பதிவு C மற்றும் D இற்கு சம்பளத்தின் 151% உம் வழங்கப்படும்)

**எல்லா விண்ணப்பதாரிகளுக்கும்**

**மேற்படிப்புக்கான விடுமுறை**

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் அதற்கு மேல் கொண்டுள்ளவர்கள் ஏழு வருடசேவையினை பூர்த்தி செய்த பின்னர் முழுக் கொடுப்பனவுடனான ஒருவருட மேற்படிப்புக்கான விடுமுறை அல்லது கொடுப்பனவு இன்றிய இரண்டு வருட விடுமுறையை பெற தகைமை பெறுவர் மேற்படிப்புக்கான விடுமுறையில் வெளிநாடு செல்வோர் மற்றும் அவர் துணைவருக்கு முழு பிரயாண வசதிகளும் கிடைக்கத் தகைமை உண்டு.

**அனுகூலங்கள்:**

நியமனம் பெறுபவர் பல்கலைக்கழகத்தின் சேமலாப நதிதிக்கு பங்களிப்பு செய்பவராக மாதாந்த சம்பளத்தில் 10% பங்களிப்புச் செய்பவர் பல்கலைக்கழகம் 8%,7% மற்றும் 3% ஐ மாதாந்த சம்பளத்தில் பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யும் இது முறையே பல்கலைக்கழக சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகும்

**முக்கியம்:**

மேற்படி பதவிக்கான மேற்படிப்புக்கான விடுமுறை மற்றும் அனுகூலங்கங்கள் பற்றிய விபரங்கள் பல்கலைக்கழக இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபரமான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேற்படி பதவி பற்றிய விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதிப்பதிவாளர்/ கல்வி நிறுவனப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது பல்கலைக்கழக இணையத்தளம் https://www.kln.ac.lk/Vacancies இலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களை வேண்டுவதற்கு 23X10Cm அளவிலான ஓர் சுயமுகவரி இடப்பட்ட, முத்திரை பதித்த கடித உறையை இணைத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடனான எல்லா விண்ணப்பங்களையும் பதிவுத்தபாலில் களனிப்பல்கலைக்கழகம் பிரதிப்பதிவாளர்/கல்வி நிறுவனங்கள் இற்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது 2023.06.22ம் திகதி அல்லது அதற்கு முன்பு ஸ்கேன் பிரதிகளுடன் கீழக்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும். (மூடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்பு விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்) விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம், மின் அஞ்சலின் விடயப்பரப்பில் குறிப்பிடப்படல் வேண்டும்.)

விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அபேட்சகர்கள் சமர்ப்பிதல் வேண்டும்.

பூர்த்தியற்ற, தகைமையற்ற அல்லது மூடப்படும் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

நூலகம் : aemt@kln.ac.lk

2. தற்காலிக விரிவுரையாளர்
3. தற்காலிக
4. கனிஸ்ட பிரிவினர்

**விஞ்ஞான பீடம்**

கணித/தாவர மற்றும் நுண் அணு உயிரியல்/பௌதிகவியல் மற்றும் இரத்திரனியல்/இரசாயனம்/ புள்ளிவிபரம் மற்றும் கணனி விஞ்ஞானம்/நுண்ணுயிரியல்/உயிரியல் மற்றும் சுற்றாடல் முகாமைபிரிவுகள்/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம்/மென்பொருள் பொறியியல் கற்கை அலகு

**மற்றும்**

**மானிடவியல் பீடம்**

சிங்களம்/ஹிந்தி/பாலி மற்றும் புத்தசமய கல்வி/ஆங்கிலம்/சமஸ்கிருதம்/கீழைத்தேய கல்வி/ அழகியற்கலை (அரங்கேற்றகலை, வடிவமைப்பு நடன கலைப்பிரிவு/நாடகம், சினிமா மற்றும் தொலைகாட்சி/மொழியியல் நவீன மொழிகள்/மேலைத்தேய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ கலாசாரம்/ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவுகள் வேந்தர் அலுவலகம் - கல்விபிரிவு

**விண்ணப்பிக்கும் முறை:**

விபரமான விண்ணப்பங்களை ஒன்லைன் மூலமாக மட்டுமே வரவழைக்கலாம் - ஒன்லைன் விண்ணபங்கள், விண்ணப்பங்களை நிரப்புவதற்கான வழிகாட்டல்கள் மற்றும் தகைமைகள், சம்பளம் மற்றும் அனுகூலங்கள் பற்றிய தகவல்களை அடைவதற்கு தயவு செய்து பல்கலைக்கழக இணையத்தளம் https://www.kln.ac.lk/Vacancies இற்கு விஜயம் செய்யுங்கள்

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்**
**01.06.2023**

---

# NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA SRI LANKA
### VACANCIES FOR THE POSTS OF PERMANENT AND TEMPORARY POSITIONS

The University of Vavuniya will entertain applications from suitably qualified Sri Lankan citizens for the following posts up to **30.06.2023**.

## 1. FACULTY OF BUSINESS STUDIES

a) **Department of Marketing Management**
Senior Lecturer Gr I/ Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Marketing Management

b) **Department of Human Resource Management**
Senior Lecturer Gr I/ Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Human Resource Management

c) **Department of Business Economics**
Senior Lecturer Gr I/ Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Business Economics

d) **Department of Project Management**
i. Academic Staff who are working as Senior Lecturer Gr I/ Gr II in Project Management and willing to serve on sabbatical assignment can apply during their sabbatical leave.
ii. A person who has professional qualifications and experience in Project Management can also apply for contract/ assignment basis appointment.

e) **Department of Finance and Accountancy**
i. a. Academic Staff who are working as Professor or Senior Lecturer Gr I/ Gr II in Banking / Insurance and willing to serve on sabbatical assignment can apply during their sabbatical leave.
b. A person who has professional qualifications and experience in Project Management can also apply for contract/ assignment basis appointment
ii. Temporary Assistant Lecturer in Banking/ Insurance

f) **Department of English Language Teaching**
Instructor in English (Temporary)

## 2. FACULTY OF TECHNOLOGICAL STUDIES

a) **Department of ICT**
i. Senior Lecturer Gr I/ Senior Lecturer Gr II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in Information Communication Technology

<u>Note:</u>

Preference will be given to those who have strong background in Network and Cyber Security, Embedded System Technologies, Machine Learning Technologies, Software Engineering and Multimedia Technologies

ii. Academic Staff who are working as Senior Lecturer Gr I/ Gr II in Information Communication Technology and willing to serve on sabbatical assignment can apply during their sabbatical leave.

Applicants who are interested in the above posts are requested to visit University of Vavuniya Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**Registrar / University of Vavuniya**
02.06.2023

---

### செலான் வங்கி பீ.எல்.சீ.

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டின் 4 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ம் பிரிவின் கீழ் 2023/03/28 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

கிளை : அக்கரைப்பற்று
கணக்கு இலக்கம் : 1160-12944363-101

(2007 ம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு அருள்வாணி சுதர்சன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 ஜனவரி 04ம் திகதியிடப்பட்ட 756ம் இலக்க பிணைமுறியின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவர்களான/ அடகு வைத்தவர்களான" நிந்தவூர் 02 ஐச் சேர்ந்த மொஹமட் அலியார் மொஹமட் தாஹிர் மற்றும் நிந்தவூர் 03 ஐச் சேர்ந்த சுனைடீன் அப்துல் ரஹ்மான் மறுபெயர் ஜுனைடீன் அப்துல் ருஹமான் என்பவர்களால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறியின் மீது பெறப்பட்ட தவணைக் கடன் (SMI கடன்) வசதிக்காக 2023 ஜனவரி 20ம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக பத்தொன்பது மில்லியன் ஐந்நூற்று எண்பத்தைந்தாயிரத்து நூற்று எழுபத்தெட்டு ரூபா இருபது சதத் (ரூ.19,585,178.20) தொகையை மற்றும் 2023 ஜனவரி 21ம் திகதி தொடக்கம் பதினெட்டு மில்லியன் ஐந்நூற்று அறுபத்தாறாயிரத்து எண்ணூற்று நாற்பத்து நான்கு ரூபா ஐம்பத்தாறு சதத் (ரூ.18,566,844.56) தொகை மீது பத்து வீத (10%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து (சலுகைக் கால வசதி தவிர்த்து) செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான பத்தொன்பது மில்லியன் ஐந்நூற்று எண்பத்தைந்தாயிரத்து நூற்று எழுபத்தெட்டு ரூபா இருபது சதத் (ரூ.19,585,178.20) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2023 ஜனவரி 21ம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் மேற்குறித்த பிணைமுறியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகையில் பகுதிக் கொடுப்பனவாக கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 756ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை**

**காணி 01**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் நிந்தவூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கரவாகு பற்று, நிந்தவூர்-24 கிராமத்தில் அமைந்துள்ள காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான Lion எஸ். நேசராஜா என்பவரால் 2013.05.09ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட SNR/2012/1486 ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட "R/495/2009 ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 2 இன் பகுதி" என அழைக்கப்படும் காணித் துண்டு மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: ஏ.எஸ். முர்சித் மற்றும் ஏ. ஸலாம் என்பவர்களின் காணி கிழக்கு: தனியார் பாதை (3மீ) தெற்கு தற்போது எம்.எஸ். அப்துல் ருஹமான் என்பவரின் காணி மேற்கு எம்.எச். ரிபாயா மற்றும் இசட் பாதிமா ரி∴ப்னா என்பவர்களின் காணி ஆகிய எல்லைகளைக் கொண்ட காணியின் பரப்பளவானது ஒன்பது புள்ளி இரண்டு ஆறு பேர்ச் (ஏ.0-றூ.0- பே.9.26) ஆகும்.

**காணி 02**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் நிந்தவூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கரவாகு பற்று, நிந்தவூர்-24 கிராமத்தில் அமைந்துள்ள காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான Lion எஸ். நேசராஜா என்பவரால் 2016.03.15ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட SNR/2016/2905 ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 2 என பிரித்தொதுக்கப்பட்ட "தாமரைகுளம் மற்றும் வெட்டுகாடு" என அழைக்கப்படும் (SNR/2016/2905 ம் இலக்க நில வரைபடத்தின் பிரகாரம் தாமரரைக்குளம் மற்றும் வெட்டுக்காடு என அழைக்கப்படும்)" காணித் துண்டு மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: லொட் 01 கிழக்கு: தனியார் பாதை (3மீ) தெற்கு சந்தை வீதி மேற்கு தற்போது எம்.எஸ். அப்துல் ருஹமான் என்பவரின் காணி ஆகிய எல்லைகளைக் கொண்ட காணியின் பரப்பளவானது பத்து புள்ளி நான்கு எட்டு பேர்ச் (ஏ.0-றூ.0-பே. 10.48) ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

---

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer
adz it's what you want
Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer
adz it's what you want



- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

---

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## தே சக்தி நிதியத்திற்கு உரித்தான கொத்மலை தேயிலை தொழிற்சாலையின் முகாமைத்துவம் மேற்கொள்வதை ஒப்படைப்பதற்கான விலைமனுக் கோரல்

2000 இலக்கம் 47 என்ற தே சக்தி நிதிய சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தே சக்தி நிதியத்திற்கு உரித்தான கொத்மலை தே சக்தி தேயிலை தொழிற்சாலையை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழிவுகளுடன் கூடிய விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி | தொழிற்சாலை | பிரதேச செயலகப் பிரிவு | மாதாந்த தேயிலை உற்பத்தி (கி.கி) மற்றும் ஏனைய உரித்தான தகவல்கள் |
|---|---|---|---|
| 01 | கொத்மலை | கொத்மலை | 38,000 |

இத் தொழிற்சாலையைப் பரீட்சித்துப்பார்ப்பதற்காக, 2023.06.15 அன்று மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை நவதிஸ்பனெ, திஸ்பனே இல் அமைந்துள்ள தேயிலை, தொழிற்சாலை வளாகத்தில் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2023.06.06 முதல் 2023.06.23 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 10,000.00 இற்கான வைப்புத் தொகையை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்தி இதற்கான தகவல்கள் அடங்கிய மாதிரிப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை 2023.06.27 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர், "தலைவர், அமைச்சின் பெறுகைக் குழு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 11ஆம் மாடி, செத்சிரிபாய, படிநிலை II, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் 2023.06.27 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 08ஆம் மாடியின் A வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், கொத்மலை தே சக்தி தேயிலைத் தொழிற்சாலையை முகாமைத்துவ அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கான விலைமனுத் திறத்தல் 2023.06.27 அன்று பி.ப. 2.00 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் குறித்த விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர்கள் சமுகமளித்திருக்கலாம்.

மேலும், இவ் அபிவிருத்தி விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல், திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக் குழு,**
**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**தொலைபேசி இல: 011-2186076 நீடிப்பு - 311**

திகதி : 2023.06.05

---

# பெறுகை அறிவித்தல்
## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## 60/70 தரத்தில் தார் மற்றும் இமல்சன் வழங்குதல்

இவ் அதிகார சபையின் கீழ்க்காணும் எஸ்போல்ட் உற்பத்தியகம் மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் பணிமனைகளில் மூன்று மாத தேவைப்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதிகளை கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | எஸ்போல்ட் உற்பத்தியகம் மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை | வழங்கும் அளவு கி.கி. | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. (பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக | வங்கிப் பிணை |
| PRDA/WP/PRO/2023/34 | 1. பன்னல எஸ்போல்ட் உற்பத்தியகம் | 50,000 | 2,000.00 + வெட் வரி | 145,000.00 | 290,000.00 |
| | 2. வகவத்த உற்பத்தியகம் | 30,000 | | | |
| | கொழும்பு, மொறட்டுவை, அவிசாவளை CSS1 | 7138 L | | | |
| | CRS1- | 9777 L | | | |
| | ஹொரண, களுத்துறை, அகலவத்த CSS1 | 7000 L | | | |
| | CRS1- | 5000 L | | | |
| | நீர்கொழும்பு, உடுகம்பொல, கிரிந்திவெல, நிட்டம்புவ CSS1 | 12800 L | | | |
| | CRS1- | 11000 L | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.06.05 முதல் 2023.06.19 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்திற்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித் தொகை ரூ. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2023.06.20 பி.ப. 2.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ் வேளையிலேயே இவ் அலுவலகத்தில் நடைபெறும். அவ்வேளையில் வழங்குநருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல. 59, செ.செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12**

**தொ.பே.இல. 011-4549825/ 4849845**

# இலங்கை அணி அபார வெற்றி

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 132 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டிய இலங்கை அணி இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 1–1 என சமநிலைக்கு கொண்டுவந்தது.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியை சந்தித்த நிலையில் நேற்று (04) நடந்த இரண்டாவது போட்டியில் நான்கு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

அதன்படி முதல் போட்டியில் ஆடிய அஞ்சலோ மத்தியூஸ், துஷான் ஹேமன்த, லஹிரு குமார மற்றும் மதீஷ பத்திரன ஆகியோருக்குப் பதிலாக சதீர சமரவிக்ரம, வனிந்து ஹஸரங்க, மஹீஷ் தீக்ஷன மற்றும் துஷ்மன்த சமீர ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆப்கான் அணி முதல் போட்டியில் ஆடிய அதே அணியுடனேயே நேற்று களமிறங்கியது.

இந்நிலையில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஸ்திரமான ஆரம்பத்தை பெற்றது. பத்தும் நிசங்க (43) மற்றும் திமுத் கருணாரத்ன (52) முதல் விக்கெட்டுக்கு 82 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இதில் சிம்பாப்வேயில் இந்த மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு முன்னர் இரண்டு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் ஒருநாள் அணிக்கு அழைக்கப்பட்ட கருணாரத்னவின் அரைச்சதம் தீர்க்கமாக இருந்தது.

இந்நிலையில் முதல் வரிசையில் வந்த குசல் மெண்டிஸும் சற்று இடைவெளிக்குப் பின்னர் சோபித்தார். 75 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 7 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 78 ஓட்டங்களை பெற்றார்.

இது 2023 ஆம் ஆண்டில் மெண்டிஸ் ஆடிய ஏழு ஒருநாள் இன்னிங்ஸ்களில் பெற்ற முதல் அரைச்சதமாகும்.

இதன்போது மெண்டிஸ், சதீர சமரவிக்ரமவுடன் இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்காக 88 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றார். மூன்று ஆண்டுகளின் பின்னர் இலங்கை ஒருநாள் அணியில் ஆடிய சமரவிக்ரம 46 பந்துகளில் 45 ஓட்டங்களை பெற்றார்.

கடைசி ஓவர்களில் அணித் தலைவர் தசுன் ஷானக்க 13 பந்துகளில் 23 ஓட்டங்களை விளாசியதோடு வனிந்து ஹசரங்க ஆட்டமிழக்காது 12 பந்துகளில் 29 ஓட்டங்களை பெற்றார். அதேபோன்று தனஞ்சய டி சில்வாவும் ஆட்டமிழக்காது 24 பந்துகளில் 29 ஓட்டங்களை குவித்தார்.

இதன்மூலம் இலங்கை அணியால் கடைசி பத்து ஓவர்களுக்கும் 109 ஓட்டங்களை பெற முடிந்தது.



50 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 323 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய ஆப்கான் அணியின் ஆரம்ப வீரர் ரஹமதுல்லாஹ் குர்பாஸை 2 ஓட்டங்களில் சாய்க்க துஷ்மன்த சமீரவினால் முடிந்தது.

எனினும் மறுமுனையில் ஆடிய இப்ராஹிம் சத்ரான் நிதானமாக செயற்பட்டு 75 பந்துகளில் 54 ஓட்டங்களை பெற்றார். அதேபோன்று ரஹ்மத் ஷா (36) மற்றும் அணித் தலைவர் ஹஷ்மதுல்லா ஷஹிதி (57) 84 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர். இது ஒரு கட்டத்தில் அந்த அணியை ஸ்திரமான நிலைக்கு இட்டுச் சென்றபோதும் ஓட்ட வேகம் மந்தமாக இருந்ததால் வேகமாக துடுப்பெடுத்தாட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

இதனால் ஆப்கான் அணி கடைசி நேரத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. நஜிபுல்லா சத்ரான் மற்றும் மொஹமது நபி தலா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது அந்த அணியின் எதிர்பார்ப்பை சிதறடித்தது.

அஸ்மதுல்லா ஓமர்சாய் 31 பந்துகளில் 28 ஓட்டங்களை பெற்ற நிலையில் வெளியேற பின்வரிசை வீரர்கள் ஒற்றை இலக்கங்களையே பெற்றனர். இதனால் ஆப்கான் அணி 42.1 ஓவர்களில் 191 ஓட்டங்களுக்கே சுருண்டது. குறிப்பாக ஆப்கான் அணியின் கடைசி 7 விக்கெட்டுகளும் 45 ஓட்டங்களுக்கே பறிபோனது.

இதன்போது இலங்கை சார்பில் வனிந்து ஹசரங்க மற்றும் தனஞ்சய டி சில்வா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். காயத்தில் இருந்து மீண்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அணிக்கு திரும்பி இருக்கும் துஷ்மன்த சமீர 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இதில் வனிந்து ஹசரங்க ஒருநாள் போட்டிகளில் ஐந்து இன்னிங்ஸ்களுக்குப் பின்னரே விக்கெட் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி வரும் புதன்கிழமை (07) நடைபெறவுள்ளது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

## முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை ஏ அணி தோல்வி



இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை ஏ அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

பல்லேகலவில் நேற்று (04) நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை ஏ அணி ஆரம்பத்திலேயே அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

எனினும் ஆரம்ப வீரர் மற்றும் விக்கெட் காப்பாளரான நிஷான் மதுஷ்க ஒருமுனையில் நிதானமாக ஆடி 68 ஓட்டங்களை பெற்றதோடு மத்திய பின்வரிசை வீரர்கள் ஓட்டங்களை அதிகரித்தனர்.

குறிப்பாக துடுப்பாட்ட சகல துறை வீரரான ஜனித் லியனகே கடைசி வரை களத்தில் இருந்து 79 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது அவர் 6ஆவது விக்கெட்டுக்காக அஷேன் பண்டாரவுடன் சேர்ந்து 73 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார்.

51 பந்துகளை எதிர்கொண்ட அசேன் பண்டார 3 பௌண்டரிகளுடன் 41 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை ஏ அணி 50 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 264 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க ஏ அணியின் ஆரம்ப வீரர் ஜேர்டன் ஹெர்மனை டக் அவுட் செய்ய முடிந்தபோதும் தொடர்ந்து அந்த அணிக்கு நெருக்கடி கொடுக்க முடியாமல்போனது.

இலங்கை ஏ அணி தென்னாபிரிக்க ஏ அணியின் முதல் ஐந்து விக்கெட்டுகளையும் 104 ஓட்டங்களுக்கு வீழ்த்தியபோதும் மத்திய பின் வரிசையில் வந்த டேவால்ட் பிரேவிஸ் மற்றும் பெயர்ஸ் ஸ்வன்போல் இருவரும் 7 ஆவது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 113 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டு தென்னாபிரிக்க ஏ அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

பிரேவிஸ் அதிரடியாக ஆடி 71 பந்துகளில் ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களை பெற்றதோடு ஸ்வன்போல் 28 பந்துகளில் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களை குவித்தார்.

இதன்மூலம் தென்னாபிரிக்க ஏ அணி 41.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 268 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

# யாழ்ப்பாண சிறைச்சாலையில் விசேட இரத்ததான நிகழ்வு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் அண்மையில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. சிறைச்சாலை திணைக்களத்தின் நூறாவது பாதுகாவலர் அணியினரின் (யாழ்ப்பாணம் சிறைச்சாலை) எட்டு வருட சேவைக்கால பூர்த்தியை முன்னிட்டு, இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமை நடந்த இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் கே. பீ. ஏ. உதயகுமார், யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் ஹேரத், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர் நந்தினி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ரவீனதாஸ், இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ் கிளை தலைவர் கோபிநாத் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப்படையினர், யாழ் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், விளையாட்டு கழக நண்பர்கள், கிராமத்தவர்களென நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். குருதி வழங்கிய குருதிக்கொடையாளர்களுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்ப்பாண கிளையினர் சிற்றுண்டிகளையும், சான்றிதழ்களையும் வழங்கியிருந்தனர்.

மேலும் இலங்கை பேரவையின் ஊடாக அலியான்ஸ் பினான்ஸ் திருநெல்வேலி கிளையினர் மரக்கன்றுகளை வழங்கினர்.



# வடக்கின் உதயம்

## முன்னாள் எம்.பி சிவசிதம்பரத்தின் நினைவு தினம் இன்று

(கரவெட்டி தினகரன் நிருபர்)

தமிழ்த் தேசியத் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உடுப்பிட்டி நல்லூர்த் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவுதினம் இன்று (05) திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இன்று காலை 8.30 மணிக்கு நெல்லியடி பஸ்நிலைய சதுக்கத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலை அமைந்துள்ள இடத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இதில் அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும் மலரஞ்சலி செய்தும் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆய்வரங்கு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி ஆய்வரங்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாய்வரங்கில் பங்கேற்க விரும்பும்வோரிடமிருந்து ஆய்வு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

"ஆசிரிய கல்வி" என்ற தொனிப் பொருளில் ஆய்வுக்கட்டுரைகள் அமைவது அவசியம். கட்டுரைகளை ஏ4 தாளின் ஒரு பக்கத்தில் உள்ளடக்கி யுனிகோட்டில் தட்டச்சு செய்து எதிர்வரும் 30.06.2023 இற்கு முன்னர் அனுப்பி வைப்பது அவசியம். ktcresearch2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறும், மேலதிக விபரம் தேவைப்படுவோர் 0770761177 என்ற தொடர்பிலக்கத்தில் ஆய்வரங்க இணைப்பாளர் விரிவுரையாளர் சி.மனோகரனுடன் தொடர்புகொள்ளுமாறும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

# சூரிய சக்தியில் இயங்கும் மீன்பிடி இயந்திரம் அறிமுகம்

(யாழ்.விசேட நிருபர்)

சூரிய மின்னாற்றலில் (சோலார்) இயங்கும் இயந்திரபடகு வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

சூரிய சக்தியிலிருந்து கிடைக்கும் சக்தியை கொண்டு, மின்சாரத்தைப் பெற்று, 13 குதிரைவலு வுள்ள அதியுச்ச வேக இயந்திரத்தினைக் கொண்டு இப்படகு இயங்குகிறது.

இம் மீன்பிடிப்படகு வல்வெட்டித்துறையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை வெள்ளோட்டம் விடப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மணிவாசகம் என்பவரது முயற்சியால், முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, கடல் தொழிலாளர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருட்களின் தேவை இல்லாமல் வெறுமனே சூரிய சக்தியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை கொண்டு, இயங்கும் இவ்வியந்திரம் மீன்பிடித் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக எதிர்காலத்தில் அமையும்

எதிர்காலத்தில், கடற்றொழிலாளிகளின் தேவைகள் இந்த இயந்திரங்களினால் பூர்த்தி செய்யப்படுமாயின், எரிபொருள் பிரச்சனைகளிலிருந்து மீனவர்களை மீட்க முடியும் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்





மூத்த தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு விழா நிகழ்வு,அண்மையில் கொழும்பு தமிழ் சங்கத்தில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு தலைமை தாங்கிய முனைவர் சதீஷ்குமாருக்கு (M.A.MPhil), தமிழ் மொழி பெயர்ப்புடனான புனித குர்ஆன் பிரதியை கலா பூஷணம் யாழ். பரீட் இக்பால் வழங்குவதை காணலாம். அருகில்,கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## கௌதாரிமுனை வீதியை புனரமைக்க கோரிக்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி கௌதாரிமுனை பிரதேசத்திற்கான பிரதான விதியை புனரமைப்பதற்கு சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபாவிற்கும் அதிக நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பழமை வாய்ந்த கிராமங்களான கௌதாரிமுனை, வினாசியோடை மன்னித்தலை உள்ளிட்ட கிராமங்களுக்கான சேவைகள், இந்த கௌதாரிமுனை பாதையூடாகவே இடம்பெறுகிறது. இப்பாதை, இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் இவ்வீதியுடாக போக்குவரத்துச் செய்யும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக கௌதாரிமுனை மற்றும் வினாசியோடை ஆகிய பாடசாலைகளில் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் இவ்வீதியூடாக பயணம் செய்ய முடியாத நிலையில் யாழ்ப்பாணம் குருநகரில் இருந்து படகு மூலமே செல்கின்றனர். இதனால், இவ்வீதியை புனரமைத்து தருமாறு கடந்த 12 ஆண்டுகளாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் இதுவரை இவ்வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்காதுள்ளமை கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.